ஜுபிடர் பிக்சர்ஸ் சர்க்யூட்
வெளியிடப்போகும் ஓர்
உணர்ச்சிச்சித்திரம்
பானுமதி
நடிக்கும்
பரணி
லைலா
மஜ்னு
தமிழ்
தமிழ்நாட்டுக்கே புதுமையான காதல் நவீனம். இரு உள்ளங்களின் பிணைப்பை சித்தரித்துக் காட்டும் இணையற்ற காவியத்தின் காட்சிவடிவம்......
டைரக்ஷன்-ராமகிருஷ்ணா
வசனம் S.D.சுந்தரம்

குடந்தையில் புது கைராசி ஜவுளிக்கடை

V. S. R.

தீபாவளியை முன்னிட்டு புது ரக பட்டு & நூல் ஜவுளிகள் விலை மலிவில் ஏராளமாக ஸ்டாக் செய்து இருக்கிறோம். அன்பர்களுடைய ஆதரவைக் கோரும்,

சுப்ரமணிய விலாஸ்

(Pro) **V. S. RAMASWAMY (S of V. N. S. Iyer)**

பெரிய தெரு, — கும்பகோணம்.

பிராஞ்சு :—ஸ்ரீ காமகோடி வஸ்திராலயம்

பட்டமங்கல தெரு — மாயவரம்

(மணிக்கூண்டு பக்கம்)

NB :—தீபாவளி ஸ்பெஷல் ரகங்கள் We two, சந்திரலேகா ட்ரூ ஸ்டைரைப் டிசைன்கள் கிடைக்கும்.

"குண்டூசி"

தீபாவளி ஆண்டு மலர்

15—10—49க்குள் எமக்கு 6 ரூபாய் அனுப்பி சந்தாதாரராய் சேருபவர்களுக்கு ஆண்டு மலர் இனம்

வழக்கமான உன்னத முறையில் தயாராகிறது

விலை ரூ. 1-8-0

எங்களிடமோ, உங்கள் ஊர் ஏஜண்டிடமோ இப்பொழுதே பதிவு செய்து கொள்ளுங்கள்

உங்களுக்குத் தேவையான
எல்லாவித ஜவுளிகளுக்கும்
இன்றே
விஜயம் செய்யுங்கள்

Meerans

மீரான்ஸ்

பக்கிங்காம் கர்னாட்டிக் மில் ஜவுளிகள், மேட்டூர் மில் ஜவுளிகள், பம்பாய், அஹமதாபாத் மில் ஜவுளிகள் இவைகளுக்கு விநியோகஸ்தர்கள்

★

மற்றும் ட்வீட்கள், உல்லன், வெளி நாட்டு ஜவுளிகள் முதலிய எல்லாம் கைவசமுள்ளன

★

எஸ். மீரா சாகிப் அண்ட் பிரதர்ஸ்

38, ஈவ்னிங் பஸார் ரோடு,
சென்னை.

தலைமை ஆபீஸ்:
19, கிடங்குத் தெரு, சென்னை-1.

7 OCT 1949
A S

பட்டை 2, ஊசி 12.
செப்டம்பர் 1949

இந்த ஊசியில்

பாராட்டுகிறோம்	தலையங்கம்	5
பரஸ்பரம்	மலர் செய்தி	6
மங்கையர்க்கரசி	பட விமர்சனம்	7
கடைசிச் செய்திகள்	படச் செய்தி	8
புளிமூட்டை ராமஸ்வாமி	வாழ்க்கை வர்ணனை	10
புளிமூட்டை ராமஸ்வாமி	ஆர்ட் படம்	17
மேனகா	வர்ணப் படம்	18
மாறிய மனம்	சிறு கதை	19
குண்டூசியைக் கேளுங்கள்	பதில்கள்	23
செய்திப் படங்கள்	படங்கள்	31
நுனிப்புல்	'வெட்டுக்கிளி'	39
பொதுஜனம் பேசுகிறார்	கடிதங்கள்	42
பாவம், ஆறுமுகம் பிள்ளை	சிறு கதை	47
கே. மாலதி	வர்ணப் படம்	51
வைஜயந்தி மாலா	ஆர்ட் படம்	52
இன்பவல்லி	திரைக் கதை	54
பிரம்மலோகம்	ஸ்டுடியோச் செய்திகள்	63
இது செய்தி	படச் செய்திகள்	64
குண்டூசி டைரி	தினக் குறிப்பு	68

குண்டூசி காரியாலயம் :
25, கிடங்குத் தெரு, சென்னை-1.

டெலிபோன் : 4316.

வருஷ சந்தா : இந்தியா, இலங்கை-ரூ. 6.
பர்மா, முதலிய வெளி நாடுகள்-ரூ. 9.
தனிப் பிரதி : இந்தியா—அணா. 8.
இலங்கை-சதம் 50 வெளிநாடு-அ. 12



"குமரகுரு"வில் முருகனை நடித்த மாஸ்டர் மணி இப்போது பல நாடகங்களில் நடித்து வருகிறார்.

சினிமா நேசன் போட்டி 4

முதல் பரிசு	ரூ. 50
இரண்டாம் பரிசு	ரூ. 25

முடிவு தேதி 31—10—49

☐☐☐☐☐☐ஆழ்வார்
மிஸ்☐☐☐
☐☐☐மணி
மாயா☐☐
☐☐☐குமார்

நிபந்தனைகள்

1. விடைகளை தாள்களில் எழுதிஅனுப்பலாம்.
2. பிரவேசக் கட்டணம் கூபன் 1-க்கு 4 அணா. (ஸ்டாம்புகளாக அனுப்பலாம்.)
3. இப் போட்டியில் இதுவரை வெளி வந்துள்ள தமிழ் சினிமாப் படங்களின் பெயர்களையே சேர்க்கப்படும்.
4. ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு எழுத்து மட்டும் எழுதி நிரப்பி அனுப்ப வேண்டும். குறிப்பாக முதல் குறிப்பில் உள்ள ஆழ்வார் என்பதற்கு 5 எழுத்துக்கள் குறைகின்றன. இதுவரை வெளிவந்துள்ள படங்களின் பெயர்களை ஞாபகப்படுத்தி, 5 எழுத்துக்களை எழுதி நிரப்பி விடலாம்.
5. சீல் செய்யப்பட்டுள்ள ஆசிரியரின் விடைக்கு எழுத்துக்கு எழுத்து சரியாக உள்ள விடைக்கு முதல் பரிசும், ஒரு தப்புள்ள விடைக்கு இரண்டாம் பரிசும் கொடுக்கப்படும்.
6. ஒன்றுக்கு மேற்பட்ட விடைகள் பரிசுக்குறியதாக தெரிவு செய்யப்பட்டால் பரிசுத் தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.
7. சரியான விடையும், பரிசு பெற்றோர் ஜாபிதாவும் நவம்பர் மாத "இந்தியன்" பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

விடைகள், பிரவேசக்கட்டணம் அனுப்ப வேண்டிய விலாசம்:—

சினிமா நேசன் ஆபீஸ்,
தபால் பெட்டி நெ. 483,
கொழும்பு.

நீங்கள் படித்தீர்களா?

பிரபல ஆசிரியர்
"லால்ஜி"
எழுதிய

பறக்கும் குதிரை

(அதியற்புதமான கதை)

விலை அணா 3

முன்பணமாக அனுப்பும் ஏஜண்டுகளுக்கு $33\frac{1}{3}\%$ கமிஷன் தரப்படும். தனிப் புத்தகம் வேண்டுவோர் 4 அணாக்களுக்கு ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

பாப்பா பதிப்பகம்,
43, நாகப்பய்யர் தெரு,
சென்னை-5.

600 008. 134119

பட்டை 2
ஊசி 12

குண்டூசி

ஆசிரியர் பி.ஆர்.எஸ்.கோபால்

செப்டம்பர்
1949

பாராட்டுகிறோம்

சென்ற ஆகஸ்ட் மாத முடிவிற்குள் தணிக்கை செய்யப்படாத படங்களெல்லாம் 13,500 அடி நீளத்திற்கு அதிகரிக்கக் கூடாது என்று தாங்கள் விதித்திருந்த உத்தரவை சென்னை சர்க்கார் தற்காலிகமாய் ஒத்திப்போட்டிருக்கின்றனர்.

சென்ற சில மாதங்களில் நடிகர்களும், படமுதலாளி முதலானவர்களும் தம் படங்களை ஆகஸ்ட் மாதத்திற்குள் முடித்து, தணிக்கை செய்து கொள்ள எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறார்கள் என்பதையும், நீளக் கட்டுப்பாட்டை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு கால வரையறை ஏற்படுத்துவது சரியல்ல வென்றும் எழுதியிருந்தோம். படத்தொழில் பிரமுகர்களும் சர்க்காரைப் பேட்டி கண்டு தம் கஷ்டங்களை எடுத்துக் கூறினார்கள். இவற்றிற்கிணங்க சர்க்கார் இந்த உத்தரவை தற்காலிகமாய் ஒத்திப் போட்டிருப்பதற்காக, நாம் அவர்களை சந்தோஷத்துடன் பாராட்டுகிறோம்.

இது ஒரு புறமிருக்க, சென்னை சர்க்கார் இன்னொரு காரியத்தையும் செய்திருக்கின்றனர். அதாவது, தென்னிந்தியப் படங்களுக்குக் கூட நீளத்தை 11,500 அடியாக இந்திய சர்க்கார் நிர்ணயித்திருப்பதை சென்னை சர்க்கார் ஆட்சேபித்துக் கடிதம் எழுதியிருக்கிறார்களாம்.

வழக்கமாகவே, வட இந்தியப் படங்களை விட தென்னிந்தியப் படங்கள் நீளமானவையாக உள்ளன. நீளத்தைக் குறைத்தால் வட இந்தியர்களை விடத் தென்னிந்தியர்களையே அந்த உத்திரவு அதிகமாய் பாதிக்கும். ஆதலால் வட இந்தியப் படங்களை விடத் தென்னிந்தியப் படங்களுக்கு சில ஆயிர அடி நீளம் அதிகமாக அளிக்க வேண்டும் என்று முன்பே "குண்டூசி"யில் விளக்கியிருக்கிறோம். இந்தக் கொள்கையை சென்னை சர்க்கார் ஏற்றுக் கொண்டதே போல் தென்னிந்தியப் படங்களுக்கு அதிக நீளம் அவசியம் என்று இந்திய சர்க்காருக்குத் தெரிவித்திருப்பதற்காக மிகமிக சந்தோஷிக்கிறோம். இதற்காக சென்னை சர்க்காரை மிகப் பாராட்டுகிறோம்.

பரஸ்பரம்

"இந்த வருஷம் 'குண்டுசி' ஆண்டு மலர் உண்டா?", "தீபாவளி மலர் உண்டா?" என்று கேட்டு தினசரி பல கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதிலிருந்து ஒன்று நன்கு தெரிகிறது. "குண்டுசி" தீபாவளி மலர் எப்பொழுது வருகிறதென்பதை அறிவதற்காக வாசகர்கள் தீபாவளி எப்பொழுது வருகிறது என்று தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான். இவர்களுக்கு "குண்டுசி"யின் மீது அவ்வளவு அபிமானம் இருந்து வருவதற்காக நான் சந்தோஷிக்கிறேன்.

உண்மையில், நான் சென்ற வருஷம் போலவே, சென்ற ஆகஸ்ட் மாத "குண்டுசி"யிலேயே தீபாவளி மலரைப் பற்றி எழுதி யிருக்கவேண்டும். ஆனால் நான் நினைத்தேன்: சென்ற வருஷம் மலர் வந்திருப்பதால் இந்த வருஷமும் மலர் வெளிவரும் என்று வாசகர்கள் தாமாகவே ஊகித்துக் கொள்ளுவார்கள் என்று. அவர்கள் ஊகித்துக் கொண்ட தென்னவோ உண்மைதான். அவர்கள் தம் ஆவலை ஊர்ஜிதம் செய்து கொள்ளவே நமக்கு எழுதி யிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும்.

* * *

"குண்டுசி"யின் இரண்டாவது ஆண்டு—தீபாவளி மலரின் வேலை சென்ற ஒரு மாத காலமாய் மும்முரமாய் நடந்து வருகிறதென்பதைச் சந்தோஷத்துடன் தெரிவிக்கிறேன். எல்லா விதத்திலும் இந்த மலர் சென்ற வருஷ மலரைவிடச் சிறந்ததாக இருக்கும் என்று உறுதி கூறுகிறேன். இந்த மலரின் விலையை ரூ. 1—8—0 ஆக நிர்ணயித்திருக்கிறோம். குறைந்த விலையில் சிறந்த மலரை அளிக்க வேண்டும் என்ற அதே கொள்கையுடன்தான் இந்த மலரும் தயாரிக்கப்படுகிறது.

* * *

மலரைப்பற்றி முன்னதாகவே ஒன்று எச்சரித்துவிட விரும்புகிறோம். அதாவது, நம் காரியாலயத்திற்குப் பணம் அனுப்பியோ, அல்லது தங்கள் ஊர் ஏஜண்டிடம் பணம் கொடுத்தோ முன்னதாகவே பதிவு செய்து கொள்ளாதவர்களுக்கு மலர் கிடைக்காமற் போகலாம். பின்னர் எங்கள் மீது அவர்கள் வருத்தம் கொள்ளுவது பிரயோசன மளிக்காது.

* * *

சென்ற வருஷம் நான் இதே போல் எச்சரிக்கை செய்தும்கூட அதை நம்பாது அநேகர் ஏமாந்து போனார்கள். சென்ற வருஷ மலர் வெளி வந்த சில மணி நேரத்திற்குள் விற்றுப் போய் பத்திரிகை மார்க்கெட்டில் பரபரப்பை உண்டு பண்ணியது. எனவே இந்த வருஷம் என் எச்சரிக்கையை எல்லோரும் நம்புவார்கள் என்பது எனக்குத் தெரியும்.

* * *

கடைசியாக ஒரு வார்த்தை. நம் வருஷ சந்தாதாரர்களுக்கு (சென்ற வருஷம் போலவே இவ்வருஷமும்) மலரை இனமாகவே அனுப்பி வைக்கத் தீர்மானித்திருக்கிறோம். இதற்காக அவர்கள் அதிகத் தொகை அனுப்ப வேண்டியதில்லை.

அக்டோபர் மாதம் 15-ந் தேதிக்குள் நம் காரியாலயத்திற்கு ரூ. 6 அனுப்பி சந்தாதாரர்களாய்ச் சேர்ந்து கொள்ளுபவர்களுக்கும் தீபாவளி மலர் இனமாக அனுப்பி வைக்கப்படும். ஆதலால் இப்பொழுதே சந்தாதாரர்களாய்ச் சேருபவர்களுக்கு ரூ. 1—0—0 லாபமாக இருக்கும்.

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன!

1. வத்ஸலையின் வாழ்க்கை

“சாவி” எழுதிய சிறந்த சிறு கதைகள் அடங்கிய புத்தகம். கண்ணுக்கும் கருத்துக்கும் அரிய விருந்து 1-0-0

2. தெய்வச் சிலம்பு

எம். சரோஜினி எழுதிய அழகிய முழு நாவல். உயர்ந்த கற்பனை 1-0-0

★

சிறுவர் புத்தகங்கள்

1. ஜிம்மியும் சீனுவும்

சிறுவர்களுக்கான சிறந்த சித்திரக் கதைப் புத்தகம். மூவர்ண அட்டை; பின் பக்கம் ‘ஸ்கேல்’ இருக்கிறது 0-4-0

2. முயல் வேட்டை 3. வனராணி

அழகிய கதைப் புத்தகங்கள். தனித்தனியாக விலை 0-4-0

தபால் செலவு தனி. வியாபாரிகளுக்கு 25% கமிஷன் உண்டு.

வாடா மலர் பதிப்பகம் - மாம்பலம் :: சென்னை-17.

புளிமூட்டை ராமஸ்வாமி

வாழ்க்கை வர்ணனை

தன அமராவதி



விசித்ர வனிதா.

இக் புனே பெயர்கள் இருக்கின்றனவே, அவை களை ஆராயப் புகுந்தால் அதுவே ஒரு பெரிய கட்டுரை யாகி விடும். ஒரு குழந்தை பிறந்தவுடன் ஏதாவதொரு தெய்வத்தின் அழகான பெயரை அக்குழந்தைக்குச் சூட்டி வைப்பார்கள். அந்தப் பெயர், பாட்டன், பாட்டி போன்ற பெரியோர் யாருக்கேனும் முன்பே சூட்டப்பட்டதா யிருப்பின் அ அக்க வீட்டில் கட்டாயம் மு . . . அதற்குப் பதில் குழந்தைக்கு ஒரு 'கூப்பிடு பெயர்' ஏற்பட்டு விடும். நீளமான பெயர்களை வைத்து விட்டு, கூப்பிடுவதற்கு சௌகரியமா யிருக்கும் பொருட்டு அதை அர்த்த மற்ற கொச்சையாகக் குறுக்கி வருவதும் சர்வ சகஜம். "நாணு", "வெங்கிட்டு" "கோபு", "பாச்சு", "சேச்சு", "சிமாச்சு", "சீனு", "கிட்டு", "ராமு", "சுப்பிணி", "மாலி", "சுந்து" போன்ற சுருக்குப் பெயர்களெல்லாம் தினசரி நம் காதில் விழுந்து கொண்டுதானே யிருக்கின்றன. 'புளிமூட்டை'விஷயம் கூட அ படித்தான். அவருடைய சொ ஊரான தூத்துக்குடிக்குப் போ அவருடைய பால்ய நண்பர்களிட "சென்னையில் டி. ஆர். ராமஸ்வாமியைப் பார்த்தேன்" என்று சொல்லி பாருங்கள். அவர்கள் "எந்த ராம வாமியை?" என்று திருப்பிக் கே

தையும், பு த்தைச் சுவ துக்கொல்



அபிமன்யு

தலையைச் சொறிவதையும் காணலாம். "அது தானப்பா, நம்ம 'ஆச்சாமி' தெரியாதா?" என்று அடுத்தபடி கேளுங்கள். அப்புறம் பாருங்கள்; அவர்கள் முகம் 'பளிச்' சென்று மலருவதை. "அடடே! நம்ம ஆச்சாமியையா? யாரையோ சொல்கிருய் என்றல்லவோ நினைத்தேன்" என்று கூறி ஆவலோடு மேலே விசாரிப்பார்கள். அவர்களிடம் போய், "நம்ம புளிமூட்டை" என்று சொல்லியிருந்தால்கூட இவ்வளவு உத்சாகம் காட்டியிருக்க மாட்டார்கள். "ஆச்சாமி" என்ற செல்லப் பெயருக்கு அவ்வளவு மகிமை அந்த ஊரில்.

வீட்டுச் செல்லப் பெயர்கள் இந்த மாதிரி. பள்ளிக்கூடங்களிலோ செல்லப் பெயர்களுக்குப் பதில் காரணப் பெயர்களும், கிண்டல் பெயர்களும், கணக்கு வழக்கின்றி புனையப் பெறும். பள்ளிக்கூடங்களை அவைகளின் உற்பத்தி சாலை என்று கூடச் சொல்லி விடலாம். பையன்களால் காரணப் பெயரோ, கிண்டல் பெயரோ வைக்கப்படாமல் தப்பும் உபாத்தியாயர்கள் மிகச் சொற்பமே.

தமாஷான இப்பெயர்கள் சில சமயங்களில் பையன்

களிடையே அடிதடி சண்டையைக் கூட ஏற்படுத்திவைத்து விடும். உண்மையில், நம் ராமஸ்வாமியைக் கூட, அவர் பள்ளியில் படித்து வந்தபோது, அவரது உருவம் சாரணமாக, யாராவது "புளி மூட்டை" என்று கூப்பிட்டிருந்தால், அப்படிச் செய்தவரின் மூஞ்சி தூளாகியிருக்கும். ஆனல் இப்பொழுதோ அதே புனைப்பெயர் அவரது "தந்தி விலாஸ்"மாக விளங்குகிறது! 'தந்தி விலாஸ்'மாக என்ன; அவருக்கு அதிருஷ்ட விலாஸமாகவும் அது விளங்குகிறது.

'புளி மூட்டை' என்று அழைப்பவர்கள் மீது அவருக்குக் கோபம் ஏற்படுவதில்லை; அதற்குப் பதில் அவர் மிக ஆனந்தமே அடைகிருர். அகெளரவப் பெயர் போலத் தோன்றும் இப் பெயர் தான் அவருக்கு இப்பொழுது மிகுந்த கெளரவத்தையும் சம்பாத்தியத்தையும் அளித்து வருகிறது.

சாப்பாட்டிற்குக் கவலையின்றி சந்தோஷமாக தற்போது வாழ்க்கை நடத்திவரும் ராமஸ்வாமியின் பிறந்த கால நிலைமையையும் பிறகு அவர் பட்டுள்ள கஷ்டங்களையும் கேட்டால் ஆச்சரியமாகவே யிருக்கும்.

ராமஸ்வாமியின் தந்தையார் ராமகிருஷ்ணய்யர், தாயார் பெயர் காமாக்ஷி அம்மாள். இவ்விருவருக்கும் பிறந்த இரண்டு பெண், இரண்டு ஆண்களில் கடைசியாக (1912ம் வருஷம் மே மாதம் 15ந் தேதி) பிறந்தவரே நம் 'புளி மூட்டை' ராமஸ்வாமி. ராமகிருஷ்ணய்யர் தூத்துக்குடியிலுள்ள ஒரு சிவன் கோவிலின் பாஜாரகராய் இருந்துவந்தார். அவருக்கு மாதத்திற்கு எட்டு ரூபாயும், தினத்திற்கு அரைப் படி அரிசியும் சம்பளம். இந்த அரிசியை ராமகிருஷ்ணய்யர் கோவிலிலேயே சமைத்து எடுத்துக்கொண்டு உச்சி வேளைக்கு வீட்டுக்கு வருவாராம். இது நான்கு குழந்தைகளுக்கும் இரண்டு பெரியவர்களுக்கும் இரண்டு வேளைச் சாப்பாட்டிற்கு எப்படிப் போதும்? குழந்தைகளுக்கும் கணவருக்கும் சாதத்தைப் போட்டுவிட்டு அநேக நாட்கள் பட்டினியாய் படுத்துக் கொள்ளுவாராம் தாயார் காமாக்ஷி அம்மாள்.

குடும்பத்தில் அஷ்டதரித்திரங்களும் தாண்டவமாடின. குழந்தைகளின் வளர்ச்சியுடன் குடும்பத்தின் கஷ்டங்களும் வளர்ந்து வந்தன. மூத்த பெண் விவாஹ வயதை அடைந்தாள். "வரதக்ஷிணை கொடுக்க வேண்டுமே; அதற்கு என்ன செய்வோம்" என்று இராப் பகலாய் கதிகலங்கி வந்த ராமகிருஷ்ணய்யரின் நிலைமையைக் கண்டு பரிதபித்த அவரது மைத்துனர் நடராஜ சாஸ்திரியார் தம் பிள்ளைக்கே மூத்த பெண்ணை வரதக்ஷிணையின்றி விவாஹம் செய்து வைத்தார்.

அடுத்த வருஷமே இரண்டாவது பெண்ணும் விவாஹ வயதை அடைந்தாள். இந்த சமயத்தில் ஐயரின் இளைய சகோதரி (புளி மூட்டையின் அத்தை) அவர்களைப் பார்ப்பதற்காக தம் கணவருடன் கூட அவ்வூருக்கு வந்தார். தமையனின் நிர்க்கதியான நிலைமையைக் கண்ட தங்கை, தாமே வரன் தேடப் புறப்பட்டார் ஒரு வரனை நிச்சயித்து, வரதக்ஷிணைக்காக ஐநூறு ரூபாயையும் கொடுத்து உதவினாராம். கலியாணம் ஒருவாறாக நடந்தேறியது. இவ்விரு சுப காரியங்களும் முடிந்த பின்னர் தான் பெற்றோர்கள்

ளின் ஆயுளும் முடிவடைந்து விட்டது.

தாயார் இறந்த போது ராமஸ்வாமிக்கு வயது மூன்று தான் ஆகியிருந்தது. அதனால் அவருடைய அத்தை அந்த ஊருக்கு வந்து குடியேறி அக்குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். புளிமூட்டையும் அவரது தமையனும் செவ்வனே வளர்ந்தனர்.

ஐந்து வயதானதும், புளிமூட்டை தூத்துக்குடியிலுள்ள எஸ்.ஏ.வி. ஹைஸ்கூலில் சேர்க்கப்பட்டார். படிப்பில் அவர் மிகுந்த சிரத்தை காட்

தம் தலையிலிருந்த பெரும் பாரம் நீங்கியதாக சந்தோஷம் அடைந்தனர்.

ஆனால் இந்த சந்தோஷம் ஒருமாத காலத்திற்கு மேல் நீடிக்கவில்லை. அந்த சமயம் காமாக்ஷி அம்மாள் ஆறு மாத கர்ப்பிணியாயிருந்தார். இந்தக் குழந்தை பிறந்ததும் தாம் இறந்து விடுவார் என்ற விஷயம் அவருக்கு முன் கூட்டியே தெரிந்துவிட்டது. ஆதலால் தம் குழந்தைகளையும், உறவினர்களையும் அவர் வரவழைத்து அருகில் இருக்கச் செய்து கொண்டார்.

பல மணி நேர பிரசவ வேதனைக்குப் பின்னர், வயிற்றிலேயே இறந்து போன குழந்தையை டாக்டர் ஆயுதம் கொண்டு வெளியிலெடுத்தார். இது முடிந்த பின்னர் சில நிமிஷங்களுக்கெல்லாம் அம்மா

டினர். ஆனால் அதை விட அவருக்குப் பன்மடங்கு அக்கரை சங்கீதத்திலிருந்ததை தெரிந்து கொண்டார் அவரது தகப்பனர். புளிமூட்டையை சங்கீத வழியில் திருப்பி விடுவதென அவர் தீர்மானித்தார். அதன் படியே பிடில் வித்வான் சுந்தர விநாயகம் பிள்ளையிடம் புளிமூட்டை பிடில் வாசிக்கக் கற்றுக் கொள்ள ஏற்பாடு செய்தார். புளிமூட்டை அக்கரையுடன் கற்கத் தொடங்கினர். இருபது வர்ணங்கள் வரை அவருக்குப் பாடம் ஆகிவிட்டது. இனிய குரலையும் பெற்றிருந்ததால் அதே சமயத்தில் அவர் வாய்ப் பாட்டையும் விருத்தி செய்து கொண்டார்.

ஆனல், யார் தலையில் என்ன எழுதியிருக்கிறது என்று யாரால் முன்னதாகவே கண்டறிய முடிகிறது? பிடில் வித்வான் ஆக முயன்ற காமெடியன் கே. சாரங்கபாணியைப் போலவே 'புளிமூட்டை'யும் பிடிலை மூட்டை கட்டிவைத்து விட்டு, சங்கீதத்திற்கே சந்தர்ப்பம் இல்லாத ஒரு ஹாஸ்ய நடிகராக விளங்குகிருர். அவர் ஒரு ஹாஸ்ய நடிகராவார் என்று யாராவது அப்பொழுது கனவாவது கண்டிருக்க முடியுமா? அந்த ஊருக்கு வந்து முகாமிட்ட காலஞ்சென்ற பிரபல கன்னையா கம்பெனி அவரது வாழ்க்கையிலேயே ஒரு புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்தி விட்டது.

ராமஸ்வாமி கன்னையாவின் நாடகங்களை அநேகமாக தினசரி பார்த்துவந்தார். அந்த நாடகப் பாட்டுகளை அவர் பகல் வேளையில் வீட்டில் பாடி வந்தார். அதோடுகூட எஸ். ஜி. கிட்டப்பாவும், காசி ஐயரும் அவரது பக்கத்து வீட்டில் தங்கியிருந்தார்கள். அதனல் அவர்களது நட்பும் ராமஸ்வாமிக்கு ஏற்பட்டது. அதன் விளைவாகவே அவருக்குத் தாமும் நாடகத்தில் நடிக்க வேண்டுமென்ற அவா ஏற்பட்டது.

இப்படியிருக்க ராஸ்வாமி ஒரு நாள் பிடில் வாசித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு பையன் வந்து, யாரோ ஒருவர் அவரைப் பார்க்க வந்திருப்பதாகவும், அவர் தெருக்கோடி பிள்ளையார் கோவிலிலிருப்பதாகவும் சொல்லிப் போனன். உடனே ராமஸ்வாமி கோவிலுக்குப் போனர். அங்கு காத்திருந்தவர் இவரை வரவேற்று உட்காரச்சொல்லி, "அம்பி நீ நன்ருய் பாடுவாயாமே?" என்று கேட்டார். கரூரில் அப்போது நாடகம் ஆடிக் கொண்டிருந்த ஸ்ரீ பால ஷண்முகானந்த சபையின் மானேஜரான காமேஸ்வர ஐயர் அவர் என்பதும், அவர் நாடகத்திற்காக பையன்களைப் பொறுக்கி எடுப்பதற்காக வந்திருக்கிருர் என்பதும் தெரிந்தவுடன் புளிமூட்டை அளவற்ற சந்தோஷம் அடைந்தார். பெரியவர் பாடச் சொன்னர்; புளிமூட்டை பாடினர். தமக்கு நாடகத்தில் சேர சம்மதம் என்பதையும் தெரிவித்தார். பெரியவருக்குப் பையனைப் பிடித்துப் போய்விட்டது. தம் கம்பெனியின் விலாஸத்தைக் கொடுத்து, இரண்டு நாளில் வந்து அழைத்துப் போவதாய்ச் சொல்லிப் போனர்.

ராமஸ்வாமி இராப்பகலாய் நாடக சிந்தனையாகவே இருந்தார். ஆனல் ஒரு வாரம் ஆகியும் பெரியவர் வராததால், ராமஸ்வாமி தாமே கம்பெனிக்குப் போய்விடுவது என்று தீர்மானித்தார். ஆனல், அவர் கையிலோ காசில்லை. தகப்பனர் வாங்கி வைத்திருந்த சீட்டுப்பணத்தில் 45 ரூபாயை எடுத்துக் கொண்டு ராமஸ்வாமி பிரயாணமானர். அப்பொழுது அவருக்கு 15 வயதுதான் நிரம்பியிருந்தது.

எப்படியோ தட்டுத்தடுமாறிக் கொண்டு அவர் இரவு சுமார் ஒரு மணிக்கு கரூர் ஸ்டேஷனை அடைந்தார். இரவு அங்கேயே தூங்கிவிட்டு, காலையில் எழுந்திருந்து, பிடில் பெட்டி உள்பட தம் சாமான்களுடன் கம்பெனி வீட்டிற்குப் போனர். ஆனல் அவருக்குத் தெரிந்தவர் ஒருவருமில்லாததால் அங்கு யாரும் அவரை வரவேற்கவில்லை.

[தொடர்ச்சி 58-ம் பக்கத்தில்]

மாறிய மனம்

இல. அரிராமன்

சிறு கதை

சுகுணாவிற்கு, சினிமாவில் நடிக்க வேண்டும் என்று வெகு நாட்களாக ஆவல். அவள் கணவன் சந்திரனும், டைரெக்டர் சுரேஷ் கோஷும் இணைபிரியா சிநேகிதர்களாயிருக்கும் போது அது முடியாத காரியமா, என்ன?

ஆனால்......தன் ஆவலை வெளியிடாமல், மனக் குகையிலேயே போட்டடைத்து வைத்திருந்தாள் சுகுணா. வெளியிட்டால்....தன் கணவர் சம்மதிப்பாரோ, மாட்டாரோ என்ற சந்தேகம் அவளைப் பிடித்து உந்தியது.

சந்திரன் — வறுமையைப் பிறப்புரிமையாகக் கொண்டு வளமில்லா வாழ்க்கையில் உழலும் ஓர் எழுத்தாளன். அட்சரத்திற்கு லட்சம் என்று வாரி வழங்கும் வள்ளல்கள் வறண்டு விட்ட இந்தக் காலத்திலும், எழுதியே வாழ்க்கை நடத்துவதென்று தீர்மானித்துத்தான் தாலுகா ஆபீஸ் குமாஸ்தா வேலைக்கும் ஒரு தலை முழுக்குப் போட்டான். இலக்கியத் தொண்டனுக்குக் கடவுள் வயிறு என்ற அவயவத்தையும், பசி என்ற உணர்வையும் எதற்காகப் படைத்தாரோ? ஏதோ பத்திரிகாசிரியர்கள் மனமுவந்து அளிக்கும் அன்பளிப்பால் அவன் வாழ்க்கைச் சக்கரம் சுழன்று கொண்டிருந்தது.

சந்திரனும்,இன்று பிரபல டைரெக்டராகப் பிரகாசிக்கும் சுரேஷ் கோஷும் பள்ளியில் ஒன்றாகப் படித்தவர்கள் தாம். ஆனால் தன்னுடைய வாழ்க்கை மட்டும் வறுமைப் புதர்களும், துன்ப இருளும் கவிந்த ஒற்றையடிப் பாதையாகவும், சுரேஷ் கோஷின் வாழ்க்கை மின்சார ஒளி மிகுந்த தார் ரோடாகவும் இருக்குமென அவன் அன்று நினைக்கவேயில்லை.

அன்று ஏதோ ஒரு பத்திரிகாலயத்திற்குச் சென்று, சுவற்றிலடித்த பந்தைப்போல் திரும்பி வந்து,பரிதாபகரமாய் மேஜையின் மேல் கிடக்கும் தன் கதையை உற்றுப் பார்த்தபடியே நாற்காலியில் அசையாது உட்கார்ந்திருந்தான் சந்திரன்.

"சந்திரா......சந்திரா........."

இந்தக் கூப்பாடு அவன் சிந்தனையை சிதைத்தது. திரும்பிப் பார்த்தான்.

'டக்...டக்' என்ற பூட்ஸ் தாளத்துடன் டைரெக்டர் சுரேஷ் கோஷ் வந்து கொண்டிருந்தார். அவர் விரல்களுக் கிடையில் நெறிபட்டு வேதனை அனுபவித்துக் கொண்டிருந்த 'சிகரட்" பஸ்பமாகிக் கொண்டிருந்தது.

"என்ன சந்திரா? என்னவோ பித்துப் பிடித்தவன் போல் உட்கார்ந்திருக்கின்றாயே?" என்று கேட்டபடியே அவன் முன் நாற்காலியின் கைப்பிடியின் மீது உட்கார்ந்தார் டைரெக்டர்.

"என் எழுத்தோவியங்கள் எல்லாம் என்னிடம் திரும்பி வந்த வண்ணமே யிருக்கின்றன" என்றான் சந்திரன் சலிப்புடன்.

"உன்னிடமிருந்து பிரிந்து போக அவைகளுக்கு விருப்பமில்லை போலிருக்கிறது" என்றார் டைரெக்டர் ஹாஸ்யத்துடன்.

"ஆமாம், அதிலென்ன சந்தேகம்?"

என்று டைரெக்டர் கூறியதைஆமோதித்த வண்ணம் இரண்டு டம்ளரில் காபியைக் கொண்டு வந்து மேஜைமேல் வைத்தாள் சுகுணா.

"ஏன் சந்திரா? ஒன்று செய்யேன்" என்றார் காபியைச் சுவைத்துக் கொண்டிருந்த டைரெக்டர்.

என்னவென்று கேட்பது போல்

அவரை நிமிர்ந்து பார்த்தான் சந்திரன்.

"குளோப் பிக்சர்ஸார் 'மன மோஹினி' என்ற படம் தயாரிக்கப் போகிறார்கள். அப்படத்தை நான் தான் டைரெக்ட் செய்யப்போகிறேன். சினிமா ரஸிகர்கள் தற்போது புது முகங்களைத் தான் விரும்புகிறார்கள். ஆகையால் அந்தப் படத்தில் கதாநாயகியாய் நடிக்க சுகுணாவையே ஒப்பந்தம் செய்து விட்டாலென்ன? உன் கஷ்டங்களும் ஒருவாறு தீர்ந்து போகும்" என்று கூறிவிட்டு ஒரு சிகரட்டைப் பற்றவைத்தார் டைரெக்டர். பேசாமல் பதுமை போல் உட்கார்ந்திருந்தான் சந்திரன்.

"நடிப்பாளோ, மாட்டாளோ என்று யோஜிக்கின்றாயா? அதைப் பற்றி நீ கவலைப் பட வேண்டாம். ஒரு படத்திலேயே சுகுணாவை நட்சத்திரப் புகழ் ஏணியில் ஏற்றி விடுகிறேன்" என்றார் டைரெக்டர், வாயாலும் மூக்காலும் புகையை கக்கிக்கொண்டே.

"குடும்பப் பெண்கள்......" என்று இழுத்தான் சந்திரன்.

"நீ ஒரு பைத்தியம்; இந்தக் காலத்தில் எத்தனையோ குடும்பப் பெண்கள் சினிமாவில் நடிக்கிறார்களே! பரத நாட்டியம் கற்றுக் கொண்டு மேடையில் ஆடாத குடும்பப் பெண்களே கிடையாது என்று கூடச் சொல்லி விடலாம். இதெல்லாம் தெரிந்திருந்தும் கற்காலத்து மனுஷன் மாதிரி பேசுகிறாயே?" என்று கூறி விட்டு கலகலவென நகைத்தார் டைரெக்டர்.

"எதற்கும் சுகுணாவின் சம்மதம் வேண்டாமா?" என்று கூறிவிட்டுப் பின்புறம் திரும்பி அவளைப் பார்த்தான் சந்திரன்.

'சினிமாவில் நடிக்க எனக்கும்விருப்பந்தான்' என்பது போலிருந்தது அவளது முக பாவம்.

"என்ன சுகுணா உன் விருப்பம்?" என்று கேட்டார் டைரெக்டர்

சம்மதம் என்பதற்குப் பதிலாக தலையை ஆட்டினாள் சுகுணா.

"எனக்கென்னவோ ...." என்று வாக்கியத்தை முடிக்காமல் நிறுத்தினான் சந்திரன்.

"தீர யோஜித்து ஒரு முடிவிற்குவா. எனக்குக் கொஞ்சம் டவர்டோன் ஸ்டுடியோ வரையில் போக வேண்டிய வேலையிருக்கிறது. நாளை திரும்ப வருகிறேன்" என்று சந்திரனிடம் விடை பெற்றுக் கொண்டு வெளியேறினார் டைரெக்டர் சுரேஷ் கோஷ்.

அடுத்த நிமிஷம் அவரைச் சுமந்து கொண்டு டவர்டோன் ஸ்டுடியோவை நோக்கிப் பறந்தது புத்தம் புதிய "பியூக்" கார்.

"சுகுணா! நீ சினிமாவில் நடிக்கிறேன் என்பது எனக்குப் பிடிக்கவில்லை" என்றான் சந்திரன் வெறுப்போடு.

"இன்னும் எத்தனை காலத்திற்குத் தான் இந்த மாதிரி வறுமையில் கிடந்து வதைபடுவது?" என்றாள் சுகுணா.

"அதற்காக.... ....?"

"சினிமாவில் நடித்தால் ஒன்றும் குடி முழுகி விடாது. டைரெக்டர் கூட உங்கள் பால்ய நண்பர்; பள்ளித் தோழர். பத்தாயிரம், பதினைந்தாயிரம் என்று பணத்தையும் வாங்கிக் கொடுப்பார். நம் வறுமையும் ஒருவாறு விலகி விடும். நீங்கள் சொந்தமாக ஒரு பத்திரிகை கூட ஆரம்பித்து விடலாம்'' என்று மூச்சு விடாமல் பேசி முடித்தாள் சுகுணா.

சினிமாவில் நடித்துத் தான் தீர வேண்டும் என்று பிடிவாதமாயிருக்கும் அவளிடம் எதைச் சொன்னாலும் பலனேற்படாது என்றெண்ணி பேசாமல் இருந்து விட்டான் சந்திரன்.

தனது வெகு நாளைய ஆவல் பூர்த்தியாகப் போவதை எண்ணிய சுகுணாவின் மனதில் இன்பம் அலைமோதிற்று.

* * *

"மனமோஹினி" படப்பிடிப்பு வேலை யெல்லாம் முடிந்து படமும் சென்சாராகி விட்டது. அதில் சுகுணாவின் நடிப்பும் பிரமாதம்.

சுகுணாவின் பிரமாத நடிப்புடன், டைரெக்டர் சுரேஷ் கோஷின் திறமையான டைரெக்ஷனும் சேர்ந்தால் கேட்கவா வேண்டும்? படம்—பசும் பொன்னில் பதித்த வைரந்தான்.

தனது பணப் பெட்டி நிரம்பி அதற்குமேலும் வழியப் போவதை எண்ணிய படமுதலாளி பூரித்துப் போய் விட்டார்.

படம் வெற்றிகரமாய் ஓடி வெள்ளி விழா, வைர விழாக்கள் கொண்டாடப் படுவதன் மூலம், தனது புகழ் மேலும் மேலும் உயரப் போவதை நினைத்த டைரெக்டரின் மனப்படகு மகிழ்ச்சிக் கடலில் மிதந்தது.

அன்று வெளியான பிரபல ஆங்கில தமிழ் தினசரிகளின் முன் பக்கங்களை யெல்லாம் "மனமோஹினி"

[தொடர்ச்சி 66-ம் பக்கத்தில்]

தென்றேசினிமாக் கேள்விகள்

கேசவய்ய செட்டி (கோலார் தங்கவயல்)

வரவர தென்னாட்டு சினிமா நடிகைகள் ஆபாசமான முறையில் ஆடை உடுத்தி, அவயவங்களை அதிகமாய் வெளிக்காட்டி, நம் நாட்டின் அந்தஸ்தைக் குலைத்து வருகிறார்களே; நீர் இதை ஆதரிக்கிறீரா ? அல்லது எதிர்க்கிறீரா ?

நிர்வாண தேசத்தில் ஆடையுடுத்தியவன் பைத்தியக்காரனாய் கருதப்படுவான். அதுபோல எல்லாப் பட முதலாளிகளுமே இத்தக் கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கும் போது என் குரல் எங்கே எடுபடப் போகிறது ? 'பொது ஜன பாதுகாப்பாளரான' தணிக்கை போர்டாரும் இதற்கு உடந்தையாகத் தானே இருக்கிறார்கள் ?

குமாரி காந்தம் (பம்பாய்)

இந்த மாதம் பம்பாயில் ஒரு வதந்தி—டி. ஆர். ராஜகுமாரி இறந்து விட்டதாக. ஆனால் பத்திரிகைகளில் இதைப்பற்றிய செய்தியெதுவுமில்லை. இப்படியேன் உயிருடனிருக்கும் ஒரு நக்ஷத்திரம் இறந்துவிட்டதாக வதந்தியைக் கிளப்புகிறார்கள் ?

தான் இறந்து விட்டதாக ஒரு ரஸிகர் கேள்விப்பட்டு தம் அனுதாபத்தை "எனக்கே" எழுதி அழுதார் ! அதை விட மோசமானது இந்த வதந்தி என்று சொல்வதற்கில்லையல்லவா ?

குண்டூசி அன்பர் (திண்டுக்கல்)

தென்னிந்திய நடிகர்களில் சோகக் கட்டங்களில் திறம்பட நடிக்கக் கூடியவர் யார் ?

காதல் கட்டத்தில் கூட சோகத் தோற்றத்துடன் நடிக்கப் பழகியுள்ள நம் நடிகர்களைப் பற்றி நீர் இப்படிக் கேட்டது அவமானமாகவே இருக்கிறது !

சிங்காரம் (ரத்துமலைவிண்ணை)

பி. எஸ். கோவிந்தன் தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்.

மாடர்ன் பிக்சர்ஸ் புத்துயிர் பெற்று, புத்துயிர் பெறச்செய்ய முயன்றுவரும் "மஞ்சுளா" மூலம் கோவிந்தன் புத்துயிர் பெற நினைக்கிறார் !

எஸ். முத்தம்மாள் (தாழக்குடி)

கிராமபோனில் இசைத்தட்டு பாட ஆரம்பித்தவுடன் எம். வி. ராஜம்மாவின் நாயும் கூடவே பாட ஆரம்பித்து விடுவதாக ஒரு பத்திரிகை எழுதியிருக்கிறதே. இது உண்மையா ?

ஓரளவு உண்மைதான். தான் ஊளையிடுவதற்கும், கிராமபோனில் கேட்கும் சங்கீதத்திற்கும் அதிக வித்தியாசமில்லை என்று அந்த நாய்க்குத் தோன்றி யிருக்கும் !

க. மு. ஊசிமுகைதீன் (கேகாலை)

உமது பெயரால் நான் ஒரு குதிரைப் பந்தய டிக்கெட் வாங்கி யிருக்கிறேன். எனக்குப் பரிசு கிடைக்குமா ?

யாருக்குத் தெரியும் ? நான் "நல்ல" பெயருடன் விளங்கி வருவது உமக்குப் பிடிக்க வில்லை. சரி, செய்யும் !

எம். சாலிஹ் (கிள்ளான், மலாயா)

பவளக்கொடியில் டி. ஈ. வரதன் பாடும் பாட்டுகள் அவராலேயே பாடப்பட்டவையா ?

இல்லை. பாபநாசம் சிவனின் சிஷ்யர் மணியால் பாடப்பட்டவை அவை.

கே. எம். எல். நாதன் (கோயமுத்தூர்)

நாட்டிய ராணியில் தவமணி தேவி நடிப்பது உமக்குத் தெரியுமா ?

ரொம்பவும் சிரமப்பட்டுத் தெரிந்து கொண்டேன். நீர் படத்தைப் பார்க்

கும் போது உஷாராயில்லா விட்டால் "அவர் நடிக்கவே யில்லை" என்று சண்டைக்கு வந்து விடுவீர்!

எஸ். சுப்ரமண்யம் (வேங்கனூர்)

மேனுட்டினர் அழகழகாக வர்ணப் படங்களைத் தயாரிப்பதில் முனைந்திருக்கிறார்களே. இந்தியப் பட முதலாளிகளும் ஏன் வர்ணப் படத் தயாரிப்பில் ஈடுபடாமலிருக்கிறார்கள்?

எல்லாம் 'தங்கள் சாயம் வெளுத்துப் போகுமோ' என்ற பயத்தினால்தான்!

இ. கிருஷ்ணன் குட்டி (கொல்லங்கோடு)

குண்டுசியாரே! . உண்மையைச் சொல்லும். நீங்கள் பதில் அளிக்கும் கேள்விகளெல்லாம் உம்முடைய சொந்தக் "கிருதிகள்" என்று என் நண்பன் கூறுகிறான்.

இப்படிச் சில 'பிருகிருதி'கள் நினைத்துக் கொண்டால் அதற்கு நான் என்ன செய்ய முடியும்?

கே. செண்பகரத்தினம், (அருப்புக்கோட்டை)

என். எஸ். கிருஷ்ணன் எத்தனை தெலுங்குப் படங்களில் நடித்திருக்கிறார்?

ரேணுகா பிலிம்ஸாரின் "பாக்கிய லக்ஷ்மி" தெலுங்குப் படம் ஒன்றில் மட்டும்தான் அவரும் மதுரமும் நடித்திருக்கின்றனர்.

என். மணி (பன்ருட்டி)

என். எஸ். கே. சிறை செல்லுவதற்கு முன் கடைசியாய் நடித்த படங்கள் எவை?

"பரஞ்ஜோதி", "ஸ்ரீ வள்ளி", "பக்த கானத்தி" ஆகிய மூன்று படங்கள்.

எஸ். சபாபதி (அரந்தாங்கி)

என் மனைவி, என் கணவர், என் மகன் போன்ற படங்கள் வெளி வந்துள்ளன. எனவே நல்ல தம்பியைத் தொடர்ந்து நல்ல அண்ணன், நல்ல அக்காள், நல்ல பாட்டி, நல்ல தாத்தா என்றெல்லாம் படங்கள் வெளி வருமா?

இவையெல்லாம் வெளி வந்தால் இவைகளைப் பார்ப்பதற்கு "நல்ல ரஸிகர்கள்" அல்லவா இருக்க வேண்டும்? அதுதானே முக்கியம்?

எம். குருசாமி (கம்பம்)

நீங்கள் "குண்டுசி" என்று எதற்காகப் பெயர் வைத்துக் கொண்டீர்? இக் கேள்விக்கு இதற்கு முன் பதில் அளித்திருந்தாலும் மறுமுறையாகக் கூறவும்.

விஷயங்களை சேகரித்து வைத்துக் கொண்டு, தருந்த சமயத்தில், (பெரிய ஆபத் தேற்படாதபடி) 'சுருக்'கென்று குத்துவது போன்ற பதில்களை அளிப்பதற்கு அறிகுறியாக இப் பெயரைச் சூட்டிக் கொண்டேன்.

வி. ராமச்சந்திரன் (விருதுநகர்)

தமிழ்ப்பட முதலாளிகள் ஏன் சிறுவர்க்கான படங்களைத் தயாரிக்கக் கூடாது?

அவர்கள் அநேகமாக சிறுவர்கள் விரும்பக்கூடியதான பாட்டி கதைகளைத் தானே படமெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்!

எஸ். வைத்தியநாதன் (புதுடில்லி)

குமாரி ருக்மணி மீண்டும் சினிமாவில் நடிப்பாரா? மாட்டாரா?

ஆண்டவனைக் கேளுங்கள். அது சாத்தியமில்லாவிட்டால் ஒய். வி. ராவைக் கேளுங்கள்! அப்பொழுதும் பதில் கிடைக்கா விட்டால் சும்மா இருங்கள்.

டி. எஸ். ஜி. ராஜன் (தகடூர்)

பி. எஸ். கோவிந்தன் பாடும் பாட்டுகளெல்லாம் அவராலேயே பாடப்பட்டவையா?

ஆம். நாடக மேடையில் அவரது பெயரை விளங்கச் செய்தது அவருடைய பாட்டுக்கள்தாம் என்பது உமக்குத் தெரியாது போலிருக்கிறது.

எம். ஆர். சபாபதி (கொல்லங்கோடு)

கிருஷ்ண பக்தியில் மதுரம் மிளகாய்ப் பொடி இடிக்கும்போது பக்கத்திலிருந்த தம்பிக்கும், புளிமூட்டைக்கும் தும்மல் வருகிறது. ஆனால் மதுரத்திற்கு மட்டும் தும்மல் வராததேன்?

மதுரத்திற்கு மட்டுமென்ன? அந்தக் காட்சியைத் தயாரிக்கும்போது டைரெக்டர், கேமிராமென், 'ளோப்ஸ்டிக் பாய்' முதலிய யாருக்குமே தும்மல் வந்திராது என்று நான்

"நாட்டியராணி" தமிழ்ப் படத்தில் பி. எஸ். சரோஜா இரண்டாவது நாட்டியராணி யாகத் தோன்றி நடனம் ஆடுகிறார்.

சொல்ல முடியும். அசல் மிளகாய்ப் பொடியை மதுரம் இடித்திருந்தால் அந்தக் காட்சியைத் தயாரித்திருக்க முடியுமா என்று சொல்லும்!

ராஜகோபால் (பாலக்காடு)

'சினிமா தோன்றிய பிறகு விபசாரம் மலிந்துவிட்டதாக......' பத்திரிகை எழுதுகிறதே. உம் அபிப்பிராயம் என்ன?

மலிந்து விட்டதென்னவோ உண்மை தான். இந்தக் காட்சிகளை நாம் நாலணா செலவில் தத்ரூபமாய்ப் பார்த்து விடுகிறோமல்லவா!

எச். வி. கோவிந்தசாமி (ஹாஸன்)

சில பட முதலாளிகள் பணக்காரர்களைப் பழிக்கும் படங்களைத் தயாரிக்கிறார்களே, அவர்கள் உண்மையில் ஏழைகளின் அனுதாபிகளா?

நீர் உலகம் தெரியாத மனிதராயிருக்கிறீர். 'நடிப்பு வர்த்தகர்களி'டம் போய் 'உண்மை'யை எதிர்பார்க்கிறீரே?

எஸ். மந்திரம் (இலங்கை)

புதிதாக வருபவர்கள் சினிமாவில் சேர முடியாவிட்டால், "குண்டூசி"யைத் தரகராய் ஏற்படுத்தினால் அது சாத்தியமாகி விடும் என்று நண்பர் கூறுகிறார். உண்மைதானா?

திக்கு திசையற்ற சினிமா சாகரத்தில் துணைக்காக "குண்டூசி" என்ற பாராங்கல்லைக் கட்டிக்கொண்டு குதிக்கச் சொல்லுகிறார் உம் நண்பர் என்பதை இப்பொழுதாவது தெரிந்து கொள்ளும்.

வி. எஸ். கே. முகம்மது சுல்தான், (கிரம்பான், மலாயா)

நல்ல தம்பியில் நடிக்கும் பானுமதியின் சொந்த ஊர் எது? அவருக்கு விவாஹம் ஆகி விட்டதா?

ஆகிவிட்டது. வீட்டிலும், படத்திலும் டைரெக்ட் செய்ய அவருடைய கணவரிருக்கும்போது அவருக்கு என்ன குறைவு? சுமார் ஐந்து வயதுடைய

ஒரு புத்திரனை அவர் பெற்றுள்ளார். அவரது சொந்த ஊர் குண்டூர் ஜில்லாவிலுள்ள ஒங்கோல் என்ற ஊராகும்.

டி. கே. வேணு (திருவாளப்புத்தூர்)

எம். எஸ். சரோஜா ஏன் இப்பொழுது சினிமாவில் நடிப்பதில்லை?

டைரெக்டர் டி. ஆர். ரகுநாத் கொஞ்ச காலமாக ஓய்வெடுத்துக் கொண்டிருப்பதைக் கவனியும்!

எஸ். கான் (மார்த்தாண்டம்)

டி. ஆர். மஹாலிங்கத்தின் சொந்த ஊர் எது?

மஹாலிங்கத்தின் சொந்த ஊர் தென்கரை.

எல். பொன்னப்பன் (கொல்லம்)

லலிதா பத்மினி இருவரும் தற்சமயம் எங்கே இருக்கிறார்கள்? ஏதாவது படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்களா? அவர்களுடைய விலாஸம் தெரிவிக்க முடியுமா?

தற்சமயம் அவர்கள் சதா ஊர் பிரயாணத்திலேயே இருக்கிறார்கள் என்று சொல்லுவதுதான் பொருந்தும். அவர்கள் ஒரு தெலுங்குப் படத்தில் சிறிய பாகங்களில் நடித்து வருகின்றனர். ஆனால் அவர்கள் ஆடாத படமோ இல்லையென்றே சொல்லி விடலாம். விலாஸம்:—58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், சென்னை.

கே. ரத்னம் (ஈரோடு)

விநோதினி படத்தில் நடிக்கும் ஸ்டன்ட் சோமுவின் நிரந்தர விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

சதா மோட்டார் சைக்கிள்மீது காட்சி அளிக்கும் அவரது 'நிரந்தர' விலாஸத்தை நான் எப்படிக் கொடுக்க முடியும்?

கே. சுந்தரம் (வடையநல்லூர்)

பி. யு. சின்னப்பா நடித்த பிருதிவிராஜன் படம் எந்த வருஷத்தில் வெளி வந்தது?

1942-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் இப்படம் வெளியிடப்பட்டது.

பி. எஸ். ஹரிராவ் (திருநெல்வேலி)

ஹரிதாஸ் படத்தில் கிருஷ்ணனாக நடித்திருப்பவர் யார்? இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்! விலாஸம் தெரிவிக்க முடியுமா?

"ஹரிதாஸி"ல் கிருஷ்ணனாக நடித்த அதே ஹரிணிதான் "பவளக்கொடி"யில் ருக்மணியாக மாறியிருக்கிறார். விலாஸம்:—11. தெற்கு மாசி வீதி, மதுரை.

வ. சௌ. (போடி)

தமிழ் சினிமாப் பத்திரிகை உலகிலேயே முதன் முதலில் கேள்வி—பதில் பகுதியை ஆரம்பித்தவர் யார்? முதன் முதலாக இந்தியாவில் இப்பகுதியை ஆரம்பித்தவர் யார்?

எனக்குத் தெரிந்த வரையில் இப்பகுதியை இந்தியாவில் முதன் முதலில் ஆரம்பித்தவர் "மோஷன் பிக்சர் மன்த்லி" என்ற பத்திரிகையின் ஆசிரியர்தான். தமிழ் நாட்டில் முதன் முதலில் இப்பகுதியை ஆரம்பித்தது அடியேன்தான்.

எம். ஜ. நிசார் (கொழும்பு)

ஜூபிடரின் மோஹினியில் குதிரை பறக்கிறதே அது கேமிரா தந்திரமா?

இல்லை யென்றால் குதிரை பறக்கும் என்று நம்புகிறீர் நீர்?

ஆர். கோவிந்தராஜன் (சென்னை)

நம் நாடு படத்தில் கதா நாயகியாக நடிக்கும் புஷ்பா ஹன்ஸிற்குப் பதில் பொருத்தமாய் சம்பாஷணைகளைப் பேசியிருக்கும் பெண்மணி யார்?

"என் கணவர்" படத்தில் தாஸியாகத் தோன்றிய வி. செல்லம். இவரைக் "கனகாங்கி"யிலும் சந்திக்கலாம்.

ஏ. எல். நாராயணன் (உசிலம்பட்டி)

நல்ல தம்பியில் என். எஸ். கிருஷ்ணன் ஓடும் ரயிலிலிருந்து குதிப்பதாகக் காட்டப் படுகிறதே? இது நம்பக் கூடியதா?

என்ன அவநம்பிக்கை, ஐயா, உமகுள் நிற்கும் மனிதன் ஓடும் ரயிலுக்குள் குதிப்பதாய் காட்டியிருக்க வேண்டுமென்கிறீர்! அவ்வளவுதானே?

ஜி. துரைராஜ் (பாப்பாகுடி)

நான் சினிமாவில் சேர விரும்புகிறேன். அதற்கு உங்களையே நம்பியிருக்கிறேன்?

என்னை நம்பியிருக்கிறீரா? சரிதான்! 'சீக்கிரமே இந்த யோசனையை நீர் கைவிட்டு விடுவீர்' என்று நான் ஜோஸியம் சொல்லுகிறேன்!

டி. அலோசியஸ் (உயிலங்குளம்)

வசுந்தரா தற்போது என்ன செய்துகொண்டிருக்கிறார்?

தற்போது சும்மாத்தானிருக்கிறார். ஆனால் கூடிய சீக்கிரத்தில் இரண்டு படங்களில் அவர் நடிக்க ஏற்பாடாகி வருகிறது.

மு. ரசூல்கான் (பழைய வண்ணாரப்பேட்டை)

சில மாதங்களுக்கு முன் என்னெஸ்கே பிலிம் கம்பெனியில் ஜே. எம். கே. மந்திரவாதி தம் ஜால வித்தைகளைச் செய்து காட்டினாராமே, எதற்காக?

என்.எஸ்.கே யின் பழைய ஜாலங்களெல்லாம் இப்பொழுது படத்திற்கு வெற்றியளிக்க உதவாமற் போய்க்கொண்டிருப்பதால், அந்த மந்திரவாதியிடம் ஏதேனும் புதிய ஜாலங்களை என்.எஸ்.கே. கற்றுக் கொள்ள நினைத்திருக்கக் கூடும்.

நடனத்தில் புகழ் பெற்று விளங்கும் வசுந்தரா தேவி 'நாட்டியராணி'யாகத் தோன்றி இப்படி நடனம் ஆடுகிறார்.

எஸ். அகுஸ்தீன் (தைப்பிங், மலாயா)

கிறிஸ்தவ மதக் கதைகளுடன் தமிழில் எத்தனை படங்கள் வெளி வந்திருக்கின்றன?

"ஞானசௌந்தரி" ஒன்றுதான்.

எம். எஸ். ஆர். (இலங்கை)

எம். எஸ். சுந்தரிபாய் இறந்து விட்டதாக என் நண்பர் கூறுகிறார். உண்மைதானா?

அட எழவே! இதையெல்லாம் நம்பாதேயும்: சுந்தரி முன்னைவிட ஒரு சுற்றுப் பருத்து சுகமாக இருக்கிறார்.

கே. அம்பாசங்கர் (திருச்சி)

ஷேக்ஸ்பியர் எழுதிய ஹாம்லெட், மாக்பெத், கிங் லீயர், ஒத்தல்லோ போன்றவைகளை தமிழில் தயாரித்தால் நன்றாயிருக்கும் என்பது என் அபிப்பிராயம்.

சிரஞ்சீவித்துவம் பெற்ற அந்தக் கதாபாத்திரங்கள்கூட நம் படமுதலாளிகளின் கைகளில் அகப்பட்டால் கொலை யுண்டுவிடும் என்பது நிச்சயம்!

கே. ஆர். நாராயண ஐயர் (பங்களூர்)

எம். ஜி. ராமச்சந்திரனை வி. என். ஜானகி மணந்து கொண்டிருக்கிறாரா?

இந்த சுபகாரியத்தை "இளவரசி" படத்தில் பார்க்கலாம்.

எம். சுப்ரமண்யம் (ரத்தினபுரி)

நான் சினிமாவில் சேர விரும்புகிறேன். வந்தால் சேர்த்துக்கொள்வார்களா?

அவர்கள் கொல்வார்களோ மாட்டார்களோ. நீர் இப்பொழுது கொல்லி

நிர்—தமிழை, அக்ஷரப் பிழையாகப் பேசி!

கிருஷ்ணகுட்டி (சுங்கைபூலோ)

விசித்திர வனிதாவில் நடிக்கும் புளிமூட்டை ராமஸ்வாமிக்கு ஒரு ஷர்ட்டும், ஒரு சுருவாலும் தைக்க எவ்வளவு கஜம் துணி வேண்டி யிருக்கும்?

என்னைக் கேட்டால் என்ன தெரியும்? 'ஸ்வர்க்கசீமா'வில் நடிக்கும் ஜெயம்மாவைக் கேட்டுப் பாரும். அவருக்குத் தையல் அனுபவம் உண்டு.

பத்மநாதன் (குவாலாலம்பூர்)

சந்திரலேகாவில் வி. என். ஜானகி பேசுகிறாரே அது என்ன பாஷை? எந்த நாட்டில் பேசப்படுகிறது?

அதை எழுதிக் கொடுத்தவருக்கே அதன் அர்த்தம் விளங்காத ஒரு 'ஜெமினி பாஷை' அது.

கே. அப்துல்கரீம் (சிங்கப்பூர்)

டி. எஸ். கிருஷ்ணவேணி தற்சமயம் என்ன செய்து கொண்டிருக்கிறார்? ஏன் படங்களில் நடிக்கவில்லை?

கெம்ப்ராஜ் புரொடக்ஷன்ஸின் 'ராஜ விக்ரமா'வில் எம். வி. ராஜம்மா, கெம்ப் ராஜ் தோன்றும் ஒரு காதல் காட்சி

கிருஷ்ணவேணி இறந்து போய் சுமார் இரண்டு வருஷங்களாகின்றன.

சி. ஏ. பிள்ளை (நிலம்பூர்)

டி. ஆர். மஹாலிங்கம் நடித்த படங்களுள் சிறந்தது எது?

"நாம் இருவர்."

கே. வேலு (மண்ணச்சநல்லூர்)

எஸ். எம். குமரேசன் தற்போது எந்தப் படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்?

தற்போது தயாராகும் பட ஜாபிதா எதிலும் அவருடைய பெயர் காணப் படவில்லை.

ஆர். சொக்கலிங்கம் (உச்சிப்புளி)

மதுரை சித்ரகலா மூவிடோன் தயாரித்த தாய் நாடு என்ன கதியாயிற்று? பாட்லிங் மணி தற்போது எப் படத்தில் நடிக்கிறார்?

மணி நடிப்பிற்கும், டைரெக்ஷனுக்கும் ஒரு முழுக்குப் போட்டுவிட்டு பழைய 'நியூஸ் ரீல் கேமிராமென்' வேலைக்கே திரும்பி விட்டார். ஸ்ரீ. நாயகமோ ஸ்டுடியோவை மூடிவிட்டு இலங்கைக்கே போய்விட்டார்.

"மாயன்" (பருத்தித்துறை, இலங்கை)

சமூக சீர்திருத்தத்திற்கேற்ற சமூகப் படங்களைத் தயாரிக்காமல் மக்களை மாக்கள் ஆக்கும் புராணப் படங்களையே நம் பட முதலாளிகள் தயாரித்து வருவது சரியா?

புராணப் படங்களால் சமூகம் சீர்திருந்தாது என்று நினைப்பது தவறு. ஆனால் நம் படமுதலாளிகள் தாம் புராணப் படங்களைக் கண்ராவியாகச் செய்து வருகின்றனர்!

எஸ். சுப்பையா (திருநெல்வேலி)

எம். எஸ். சரோஜா, குமாரி ருக்மணி இருவரும் படங்களில் நடிக்கிறார்களா? எனின் எந்தெந்தப் படங்களில்?

இருவரும் இரண்டு வேலையில்லாத இரு டைரெக்டர்களுக்கு பொழுது போக்காக விளங்கி வருகின்றனர்.

என். ஆர். ஜெகன்னாதன் (எரவாஞ்சேரி)

சக்ரதாரியில் எஸ். ஆர். லக்ஷ்மி தாம் விற்கும் வெற்றிலைக்குக் காசு வாங்கிக் கொள்ளாத மர்மம் என்ன?

முருகன் டாக்கீஸாரின் 'ரத்னகுமார்' தமிழ்ப் படத்தில் என்.எஸ். கிருஷ்ணன் தோன்றும் ஒரு ஹாஸ்யக் கடடம்

மர்மம் இதுதான். அவர் காசு கொடுத்து வாங்கியிருந்தாலல்லவோ அதைக் காசுக்கு விற்க வேண்டு மென்ற எண்ணம் ஏற்படுவதற்கு!

ஆர். மஹாராஜபிள்ளை (தாழக்குடி)

'வல்லவனுக்கும் வல்லவன் உண்டு வையகத்தில்' என்ற பழமொழிப்படி உம்மாலும் பதிலளிக்க முடியாத கேள்வி வந்தால் என்ன செய்வீர்?

இந்தப் பழமொழியைத் தெரிந்து கொண்டிருக்கும் உமக்கு, 'மௌனம் சர்வார்த்த சாதகம்' என்ற பழமொழியும் தெரிந்திருக்கும் என்றே நம்பினேன்!

எம். டி. என். ராஜன் (திருப்பத்தூர்)

எனக்கு நடிக்கவும் பேசவும், பாட வும் தெரியும். ஒரு படத்தில் நான் எம். ஆர். சந்தானலக்ஷ்மியின் புத்திரனாக நடிக்க விரும்புகிறேன். இது முடியுமா?

நீர் கெட்டிக்காரப் பேர் வழி, ஐயா! தாய்மையில் தேர்ந்த ஒருவரின் மகனுகத்தான் நீர் ஆக முயலுகிறீர். இது சாத்தியமானால், நீர் நடிப்புலகில், 'தாயில்லா சேய்'போல் தவிக்க வேண்டியேயிருக்காதுஎன்பதுண்மை, ஆனால் அதிருஷ்டம் உம் பக்கம் இருக்க வேண்டுமே?

டி. அலோசியஸ் (உயிலங்குளம்)

நம் நாடு படத்தில் நடிக்கும் புஷ்பா ஹன்ஸ் யார்? எந்த ஊரைச் சேர்ந்தவர்? என்ன ஜாதியைச் சேர்ந்தவர்?

புஷ்பா ஒரு பெரிய சர்க்கார் உத்தியோகஸ்தரின் மனைவி என்று கேள்வி. பம்பாயில் வசிக்கும் அவர் மஹாராஷ்டிர வகுப்பைச் சேர்ந்தவர்.

பி. ராமஸ்வாமி (மைசூர்)

பெண்கள் போனால் சினிமாவில் சுலபமாகச் சேர்த்துக் கொள்கிறார்கள். ஆனால் ஆண்கள் போனால் அவ்விதம் செய்யாததேன்?

பெண்களைச் சேர்த்துக் கொண்டால் ஆண்கள் தாமாக (துணைக்கு) வந்து



பம்பாயிலிருந்து வெளிவரும் ஹிந்திப் படங்களில் கடம், மோர்சிங் முதலியவற்றை வாசித்துள்ளார் ராஜாமணி

சேருவார்கள் என்ற நம்பிக்கைதான்! பெண்ணென்ருல் பேய் கூட இரங்கும் என்பார்கள். அதைவிடவா மோசமாய் இருக்க முடியும் நம் படமுதலாளிகள்!

ஹம்ஸா (மதுரை)

டி. ஆர். ராஜகுமாரியைப்பற்றி உம் அபிப்பிராயம் என்ன ?

எந்த வேஷத்தையும் 'கவர்ச்சி'யுடன் நடிக்கக் கூடியவர் என்பதுதான் என் அபிப்பிராயம்.

ஆர். கோவிந்தராஜ் (கிர்க்கி)

'எம். கே. டி. பாகவதர் அமரகவியில் நடிக்கப் போவதில்லை' என்பது போன்ற செய்திகள் குழப்பத்தை உண்டுபண்ணுகின்றனவே. அவர் அமரகவியில் மட்டும் நடிக்கப் போவதில்லையா? அல்லது இனி படங்களிலேயே நடிக்கப் போவதில்லையா ?

நீர் கேட்டவதந்திகளெல்லாம் ஆதாரமற்றவை. "அமரகவி"யின் ஷூட்டிங்கை இந்த விஜயதசமி அன்று ஆரம்பிக்கிருர்கள். அதில் பாகவதர் தான் நடிக்கப்போகிருர்.

ஸ்வாமி (கல்கத்தா)

டைரெக்டர் வாஸன் நிஷான் படத்தை "இதுவரையில் இதுபோன்ற படம் வந்ததுமில்லை; வரப்போவதுமில்லை" என்று ஜனங்களும், பத்திரிகைகளும் புகழும்படி தயாரிப்பார் என்று எதிர் பாக்கிறேன். சரிதானு?

சரிதான். நாமெல்லாம் எதிர்பாராமலிருந்தபோதே ஸ்ரீ. வாஸன் "சந்திரலேகா" மூலம் புரட்சியை உண்டு பண்ணினுர். இப்பொழுதோ எதிர்பார்ப்பு அதிகமாயிருப்பதால் "நிஷானை" மேலும் சிறந்த படமாக வெளியிடுவார் என்று எதிர்பார்ப்பதில் தவறேயில்லை.

என். கணபதி (மயிலை)

எம். வி. மணி தற்போது எந்தெந்தப் படங்களில் நடிக்கிருர்?

அவர் "மச்சரேகா", "வனசுந்தரி" ஆகிய படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிருர்.

வி. சுப்ரமணியம் (கோயமுத்தூர்)

நம் படமுதலாளிகள் எவரேனும் கிழவியின் காதலி என்ற படத்தைத் தயாரிக்கிருரா?

இல்லை. ஆனுல் தயாரித்தால் பிரதான வேஷத்திற்கு ஏராளமான பிரதம நடிகைகள் போட்டி போடுவார்கள்.

சொ. கபீர்தாஸ் (சென்னை)

கன்னியின் காதலி படத்தில் ஆதித்தனுக நடிக்கும் மாதுரிதேவிக்கு ஆண் குரல் இரவல் கொடுத்தது யார்?

பாடுவதற்கு திருச்சி எம். லோகநாதனும், பேசுவதற்கு ("மிஸ் மாலினி"யில் ஆபீஸ் பையனுய் நடித்த) கோபாலகிருஷ்ணனும் குரல் இரவல் தந்துள்ளனர்.

என். ஷேக்தாவுத் (திண்டுக்கல்)

வி. என். ஜானகி, எஸ். வரலக்ஷ்மி இவ்விருவருள் யாருக்கு டென்னிஸ் நன்ருய் ஆடத்தெரியும்? போட்டியில் வெற்றி பெறுகிறவருக்கு பரிசளிப்பதற்காக ஒரு வெள்ளிக் கோப்பையைச் செய்து வைத்திருக்கிறேன்.

இருவருக்குமே டென்னிஸ் ஆடத் தெரியாது. இந்த விஷயத்தை உமக்குக் கண்டு பிடித்துச் சொன்னதற்காக நீர் செய்துள்ள கோப்பையை எனக்கு அனுப்பிவையும்!

பரணி பிக்சர்ஸார் தயாரித்துள்ள
தமிழ் லைலா மஜ்னுவில் பானுமதி
பிரமாதமாய் நடித்துள்ளாராம்.

ராஜவிக்ரமா தமிழ்ப்படத்தில் மணம் மிகுந்த காதல் காட்சிகள் நிறைய இருக்கும் என்று தெரிகிறதல்லவா?

கெம்ப்ராஜ் புரொடக்ஷன்ஸின் முதலாளி, டைரெக்டர், நடிகரான கெம்ப்ராஜ். (ராஜவிக்ரமாவில்)



இன்பவல்லி.

லைலா மஜ்னு
(பரணி)

இன்பவல்லி.



"ங்! இவரு கிட்டையா நடக்கும்!" என்று! என்.எஸ்.கே. சரோஜாவைப் பிடித்துகொள்கிறார் இன்பவல்லியில்.

நடனத்தில் புகழ் பெற்றுவரும் பி. கே. சரஸ்வதி இன்பவல்லி தமிழ் படத்திலும் இப்படி நடனம் ஆடுகிறார்.

சமீபத்தில் வெளிவந்திருக்கும் நாட்டிய ராணி படத்தில் பி. எஸ். சரோஜாவின் ஒரு நடனத் தோற்றம்.

நுனிப்புல்

வெட்டுக்கிளி

விரோதி வருஷத்தின் பலாபலன்கள் எப்படி இருக்கின்றன என்பது பஞ்சாங்கத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம். ஆனால், இந்த விரோதி வருஷம் நமது நக்ஷத்திரங்களில் சிலருக்கு 'விரோதி'யாக இருப்பது கண்கூடான விஷயம்.

• • •

படங்களில் 'ஷூட்டிங்'கிற்குப் போவதற்கே அவர்களுக்கு நேரம் போதும் போதாமல் இருக்கிறது. இந்த நிலையில் அவர்கள் வழக்கிலும் வம்பிலும் மாட்டிக் கொள்வதென்றால், என்ன செய்ய முடியும்?

• • •

உதாரணமாக பி. எஸ். சரோஜாவைத் தான் எடுத்துக் கொள்ளுங்களேன். அவர் பல படங்களில் நடித்து வருகிறார். சேலத்திற்கும், சென்னைக்கும், கோவைக்குமாகப் போய் வந்து கொண்டிருக்கிறார்.

• • •

அவருக்கு மனோ அதிர்ச்சி உண்டாகும்படி கோரமான கார் விபத்து நேரிடுவானேன்? அந்த விபத்தில் தம் கணவனை (போலோநாத்தை) இழந்து ஆறாத் துயரம் அடைந்துள்ளார்.

• • •

அத்துடனாவது அவருடைய தொல்லைகள் விட்டனவா? சேலத்திற்கு **இன்பவல்லி** படப்பிடிப்புக்குப் போன இடத்தில் ஏற்பட்ட கார் விபத்து சம்பந்தமான வழக்கிலும் சம்பந்தப்பட வேண்டி யிருக்கிறது.

• • •

'மத்தளத்துக்கு இரு புறமும் இடி' என்பது போல சென்னையிலும் அவருக்குத் தொந்திரவுகள்தாம். தம் சொத்துக்கள் விஷயமாக ஏற்பட்ட சிக்கல்களையும் அவர் தீர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

• • •

பிரபல நடிகை வசுந்தரா தேவியும் மூன்று வழக்குகளில் ஈடுபட்டிருக்கிறார். அவைகளில் இரண்டு, அவர் மீதுள்ள வழக்குகள். ஒன்று, அவர் கொண்டு வந்துள்ள வழக்கு.

• • •

தங்களது **நாட்டிய ராணி** படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டு, பூராப் படமும் நடிக்க மறுத்ததினால் ஐந்து லக்ஷம் ரூபாய்கள் நஷ்ட ஈடு கோரி பாஸ்கர் பிக்சர்ஸார் தொடுத்துள்ளது முதல் வழக்கு.

• • •

தம் மகள் வைஜயந்தி மாலாவுக்கு சட்டப்படி தாமே 'கார்டியன்' என்றும், தமது மகளைத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் வசுந்தராதேவி தம் கணவன் மீதும், தாயார் மீதும் தொடுத்துள்ளது இரண்டாவது.

• • •

மூன்றாவது, வாடகைக் கட்டுப்பாடு சட்டப்படி அவர் மீதுள்ள வழக்கு. தியாகராயநகரிலுள்ள தமது பங்களா காலியான விஷயத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவர் தெரிவிக்காதது இதற்குக் காரணமாம்.

• • •

இதே மாதிரியான வழக்கு ஒன்றில்

"நாட்டிய ராணி"யில் பிரபல நாட்டிய சகோதரிகளான லலிதா பத்மினி நடனமும் சேர்ந்திருக்கிறது. (லலிதா)

தெலுங்கு உப நடிகை கிருஷ்ண வேணி அகப்பட்டுக் கொண்டு அபராதம் செலுத்திய விஷயம் ஞாபகத்திற்கு வருகிறது.

• • •

விரோதி வருஷத்திய வழக்குகள் மட்டுமன்றி, பல சமயங்களில் நடந்த சினிமாப் பிரமுகர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளும் நினைவுக்கு வருகிறது.

• • •

நக்ஷத்திரங்களின் மீது அவர்களுடைய தாயார்கள் தொடுத்த வழக்குகள் பல உண்டு. அவைகளில் ஒன்று குமாரி ருக்மணி மீது அவருடைய தாயார், சில சொத்துக்கள் விஷயமாக கொண்டு வந்த வழக்காகும்.

• • •

நடிகை மாதுரிதேவி மீது, ராயபுரத்திலுள்ள அவருடைய தாயார், தமக்குச் சொந்தமான சொத்துக்களை தம் மகள் கடத்திச் சென்றதாக ஒரு வழக்கைப் பதிவு செய்தார். ஆனால் இது மாஜிஸ்டிரேட்டினால் தள்ளப் பட்டது.

• • •

இந்த சமயத்தில் கணவன்மீது வழக்குக் கொண்டு வந்த ஒரு நடிகையின் ஞாபகமும் வருகிறது. ஹாஸ்ய நடிகர் டி.எஸ். துரைராஜ் மீது லக்ஷ்மி என்ற நடிகை, தங்களுக்குப் பிறந்த குழந்தை விஷயமாக—அதைத் தம்மிடம் ஒப்புவிக்க வேண்டுமென—வழக்குப் போட்டு வெற்றியும் பெற்றார்.

• • •

சென்ற சில மாதங்களில் சில நடிகைகள் ஏமாற்றப்பட்ட விஷயத்தையும் இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

• • •

மைலாப்பூரிலுள்ள ஒரு நாட்டிய நடிகை, ஒன்றிரண்டு படங்களில் நடித்திருக்கிறார். படம் தயாரிக்கப் போவதாகக் கூறிக்கொண்டு வந்தான் ஒரு மோசக்காரன். நாட்டிய ராணிக்கு திருட்டு வைர மோதிரங்களைப் பரிசளித்து, அவர் போலீஸில் மாட்டிக் கொள்ளும்படி விட்டு விட்டு மறைந்து விட்டான்.

• • •

ஹாஸ்ய நடிகர் டி. ஆர். ராமச்சந்திரனின் பெயரில் ஒரு வாசகசாலையை மதுரையில் ஆரம்பிக்கப் போவதாகக் கூறி, அவரிடமே வந்து பணம் தட்டிக் கொண்டு போய்விட்டான் ஒரு எமகாதகப் பேர்வழி!

• • •

டி. கே. எஸ். பிரதர்ஸ் மீது, அவர்கள் தயாரித்த பில்ஹணன் படத்தில் தமக்கே ஏகபோக உரிமையாயிருந்த பாரதியார் பாட்டுகளில் ஒன்றை, தமது உத்தரவின்றி சேர்த்ததற்காக, ஒரு வழக்கை ஸ்ரீ. ஏவி. மெய்யப்பச் செட்டியார் தொடர்ந்த விஷயம் இப்பொழுது பழங் கதையாகி விட்டது.

ஒரு பிரபல நடிகரும், பிரபல நட்டுவஞர் ஒருவரும் வருமான வரியை சரியானபடி செலுத்தாமையினல் மாட்டிக்கொண்டு விழிக்கும் விஷயம் பரம ரகஸியமாகவே இருந்து வருகிறது.

• • •

எம். கே. ராதா தாம் நடித்த ராஜா கோபிசந்த் பட முதலாளி மீது தமக்குச் சேரவேண்டிய தொகைக்காக வழக்குத் தொடர்ந்து வெற்றி அடைந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி மேற்படி படத்தைக் கூட பார்த்தாராம்!

• • •

டைரெக்டர் ஆர். பத்மநாபன் தாம் தயாரிக்கும் படங்கள்மூலம் வெற்றி அடைகிருரோ இல்லையோ? தம் ரக்ஷரேகா படத்தில் நடிக்க 'இடக்கு'ப் பண்ணிய பானுமதி மீது 'கேஸ்' போட்டு வெற்றி கண்டது உண்மை.

சிறுகளத்தூர் சாமா தாம் தயாரித்த தமது சொந்தப் படம் ஒன்றை விநியோகிக்க உரிமை அளித்த ஒரு நபர் மீது தொடுத்த வழக்கின் முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர்.

• • •

ஸ்ரீ கண்ணு பிலிம்ஸாரின் திருமழிசை ஆழ்வாரை நினைத்தால் ஒரு சொட்டுக் கண்ணீராவது விடத்தான் தோன்றுகிறது. எவ்வளவு முறை ஏலம் என்ற கண்டத்திலிருந்து அது தப்பிற்று! கடைசியாக 'ரிஸீவர்' கைகளில் போய் அவர் மூலம் அது ரிலீஸூம் ஆகிவிட்டது.

• • •

சில படங்கள் வெளியான பின் அவை மீது வழக்கு ஏற்பட்டு நிறுத்தப்பட்டது முண்டு. அவைகளையும் இங்கு எழுதினல் வளர்ந்துவிடும்.

சந்தா விபரம்

	இந்தியா	இலங்கை	வெளிநாடு
ஒரு வருஷ சந்தா :	ரூபாய் 6.	ரூபாய் 6.	ரூபாய் 9.
தனிப் பிரதி :	அணு 8.	சதம் 50.	அணு 12.

விளம்பர விகிதங்கள்

ஒரு தடவைக்கு

அட்டை விளம்பரங்கள்

முன் பக்கம்	...	ரூ. 450
கடைசிப் பக்கம்	...	ரூ. 250
2 (அ) 3-ம் பக்கம்	...	ரூ. 150

சாதாரண விளம்பரங்கள்

ஒரு பக்கம்	...	ரூ. 75
அரைப் பக்கம்	...	ரூ. 40
$\frac{1}{3}$ பக்கம்	...	ரூ. 30
கால் பக்கம்	...	ரூ. 25

மற்ற விபரங்களுக்கு எழுதவும் :

மானேஜர், "குண்டூசி" காரியாலயம்,

25, கிடங்குத் தெரு, :: :: சென்னை—1.

★ நாஸ்திகம் ஒழிக

நானும் என் மனைவியும் பல புராணப் படங்களையும், சமூகப் படங்களையும் பார்த்திருக்கிறோம். ஆனால் எப்பொழுதுமே புராணப் படம் பார்த்து முடிந்து வீடு வரும்போது, 'புராணப் படங்களை எடுக்கக் கூடாது; கடவுள்களைக் காட்டக் கூடாது' என்கிறாள். இதை மறுப்பதா, ஆதரிப்பதா! அதற்குக் காரணம் இதுதான்:

இதுவரை வெளிவந்திருக்கும் புராணப் படங்களில், பலவற்றில், ஹிந்து தெய்வங்களை பல விதங்களில் ஹிம்சை செய்தும், இழிவு படுத்தியும் காட்டி வந்திருக்கிறார்கள். இதை பொதுமக்கள் இத்தனை காலம் பொறுத்துவந்தனர். பட முதலாளிகளோவிடாமல் அதே தவறைச் செய்து வருகிறார்கள். அதற்காக "புராணப் படங்களை எடுக்காதே!" என்று சொல்லி விடுவதா?

கடவுள்களைக் காட்டக் கூடாது என்று சர்க்கார் தடைசெய்ய நினைப்பதாகத் தெரிகிறது. அர்த்தமற்ற திட்டம் கொண்டு வருவதால், நாஸ்திகம் தளிர்விட்டு, பரவி வரும் இக்காலத்தில் அதற்குத் தூபம் போட்டது போலாகும். குறிப்பாக, தென்னிந்தியர்கள் தெய்வபக்தி உள்ளவர்கள். சுலபமாக அவர்களை வழிக்குக் கொண்டுவரலாம். இதை முதலாளிகள் பயன்படுத்தவில்லை. "கடவுள்களும் கெட்டுப்போனவர்களே" என்ற கருத்துடனேயே படமெடுக்கிறார்கள். இதனால் தான் நாஸ்திகம் வளர்கிறது. இதை செம்மைப் படுத்த வழி புராணங்களை உள்ளது உள்ளபடி, விபரீத மாறுதல் செய்யாமல் எடுக்க வேண்டும். புராணங்களில் ஒவ்வொரு கடவுளுக்கும் குறிப்பிட்டுள்ளபடி வேஷமிடலாம். தெய்வக் காதல் காட்சிகள், இழிவுச் சொற்கள், ஆபாச நடனங்கள் ஆகியவற்றை தடை செய்யலாம். புராணங்கள் வேண்டாம் என்று கூறுவது தவறு. நமது சர்க்கார் பாரபட்சமற்ற முறையில் நடந்து கொண்டு, படமுதலாளிகள் நாஸ்திகத்தை வளரவிடாமல், இதற்கு ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

ஏ. ராஜா,
கோயமுத்தூர்.

பெண் இனத்திற்கு இழுக்கு

நம் தமிழ்ப் படங்கள் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற்றம் அடைந்து கொண்டிருப்பது என்னவோ உண்மைதான். ஆனால், அதே சமயத்தில் நமது பெண் இனம் சினிமாமூலம் இழிநிலை அடைந்திருப்பது வருந்தத்தக்கது.

சினிமாவில் நடிகைகள், அரை நிர்வாணத்தோடு நடித்தால்தான் படம் வெற்றியடையும் என்று சினிமாத் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் நினைக்கிறார்கள் போலும். அதனால்தான் இப்பொழுது வரும் தமிழ்ப் படங்களில், மேல்நாட்டு நடிகைகளையும் தோற்கடிக்கும்படியாக நம் நடிகைகளை ஆபாசமாய் நடிக்கச் செய்கிறார்கள். இந்நிலை மிகமிக கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

நாம், சினிமா முன்னேற்றத்திற்கு மேல்நாட்டின் நுணுக்கமான கலைகளை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். ஆனால் நம் நாகரீக பண்புகளுக்கு மாறாக இருக்கும் அவர்களது நாகரீகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை, ஏற்றுக்கொள்ளவும் கூடாது. ஏனெனில் நமது கலாச்சாரம், கற்பு, நாகரீகம் இவைகள் நாளாவட்டத்தில் அழிந்துபடும்.

இதைப் படமுதலாளிகள் நன்கு சிந்தித்து, இனி எடுக்கும் படங்களிலாவது பெண் இனத்தை இழிவு படுத்தாமல் இருப்பார்கள் என்று நம்புகிறேன். அத்துடன் நடிகைகளும் இம்மாதிரி உடை உடுத்தி நடிக்கச் சம்மதிக்காமல் இருக்கும்படியும் கேட்டுக் கொள்கிறேன். அதற்கும் மிஞ்சிச் செய்தார்களேயானால் அவர்கள் தேசத்திற்கும், தங்கள் கலை

சாரத்திற்கும் பெண் இனத்திற்கும் துரோகம் செய்தவர்களாவார்கள்.

ஜி. எம். இஸ்மாயில்,
கடலூர்.

அபிப்பிராயம் மாறாது

ஜூலை இதழில் வெளியாகியிருக்கும் "அபிப்பிராயம் மாறுமா?" என்ற தலைப்புள்ள கடிதத்தைப் படித்ததும் ஏனோ என்னைத் தூக்கிவாரிப் போட்டது. அக்கடிதத்தை எழுதிய அன்பர் உண்மையை ஒளித்துப் பேசுவது போல் தோன்றுகிறது. உண்மையில் சிறந்த ஆங்கிலப் படங்களை அவர் பார்த்திருக்க மாட்டாரென அபிப்பிராயப்படுகிறேன்.

தமிழ் நாட்டில் படத்தொழில் ஆரம்பமாகி பல ஆண்டுகளாகியும் இத்தொழில் பின்னோக்கிச் செல்வதில்தான் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. மிகச் சிறந்ததென்று கருதக்கூடிய படம் ஒன்றுகூட இதுவரை தயாரிக்கப்படவில்லை "சுமாராய் இருக்கிறது", "பரவாயில்லை" என்று குறிப்பிடத் தகுதி வாய்ந்த ஒரு சில படங்களே இதுவரை வெளிவந்திருக்கின்றன. இதற்கு முக்கிய காரணம் யாதெனில், நமது படமுதலாளிகள் கலையைப் பற்றிக் கவலைப்படாது, பண வசூலை எதிர்பார்த்து, அதற்காகக் "கவலைப்பட்டு" தயாரிப்பில் ஈடுபடுவதனால்தான்.

மேல்நாட்டில் தயாரிக்கப்படும் படங்களில் நடிக நடிகையர்கள் எவ்வளவு உணர்ச்சி பாவத்துடன் நடிக்கின்றார்கள். அசம்பாவிதமாய் இலக்கண இலக்கிய வாக்கியங்களைப் பேசாது, சாதாரணமாக சம்பாஷிக்கும் தொனியில் வசனங்களைப் பேசி, வெகு இயற்கையாய் நடிக்கின்றார்கள். தத்ரூபமான காட்சி ஜோடனைகளும் உடையலங்காரங்களும் அப்படங்களில் ஓர் விசேஷ அம்சம். சர்வதேசப் புகழ் பெற்ற சில மேல்நாட்டுப் படங்களில் புகுத்தப்பட்டிருக்கும் சிற்சில கட்டங்களை நாம் பார்க்கும்போது, உண்மையான சம்பவங்களைத்தான் படம் பிடித்திருக்கிறார்களோ என்று சந்தேகிக்கும்படியான நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. இவ்விதம், பெரும்பாலும் ஒவ்வொரு படத்திலும் நடிப்புக் கலை உச்சஸ்தானத்தில் பிரதிபலிக்கும்படி செய்து விடுகிறார்கள்.

நம் நாட்டிலோ ஒரு நடிகைக்கு நல்ல புகழ் கிடைத்து விட்டால் அந்த நடிகையை பல படமுதலாளிகள் சுற்றி முற்றுகையிட்டு, தாம் தாம் தயாரிக்கவிருக்கும் படத்துக்கு ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். படத்துக்குப் பொருத்தமான நடிக நடிகையர்களை தெரிந்து எடுக்கும் வழக்கம் நம் படமுதலாளிகளிடம் கிடையவே கிடையாது.

ஆங்கிலப் படத் தயாரிப்பாளரின் விஷயமோ வேறு. நடிக நடிகையர்களை வைத்துக்கொண்டு அவர்களுக் கேற்றவாறு கதையை திருத்தியமைப்பதற்கும், கதா பாத்திரங்களை சிருஷ்டிப்பதற்கும் பதிலாக, கதை யொன்றை தெரிந்தெடுத்து அதில் வரும் கதாபாத்திரங்களுக்கேற்றவாறு பொருத்தமான தோற்றமும் வயதும் உள்ள நடிக நடிகையர்களைப் பொறுக்கி யெடுத்துக் கொண்டு படத்தை தயாரிக்கத் தொடங்குவர். குணபாவ நடிப்பிற்கே அதிக பிரதான்னியம் கொடுக்கப்படுகிறது.

ஆயினும் நம்மவருள் பலர் ஆங்கிலப் படங்களைப்பற்றி குறை கூறுவதாயிருந்தால், "முத்தமிடும் காட்சிகளும் அரை நிர்வாண டான்ஸ்களும் சர்வ சாதாரணம்; மேலும், கதா பாத்திரங்கள் பேசும் ஆங்கிலம் புரிந்து கொள்வதற்கில்லை, சங்கீதமோ படுமோசம். ரஸிப்பதற்கில்லை" என்கிறார்கள். எனினும், மிகப் பிரசித்திபெற்ற பல மேல்நாட்டுப் படங்களில், மேலே குறிப்பிட்டுள்ள "குறைகளை" பெரும்பாலும் காண முடியாதென்பதும் நம்மில் அநேகர் பார்த்தறிந்த உண்மை.

உதயமூர்த்தி நடேசன்,
கொழும்பு.

டைரெக்டர்கள் கவனிக்க

பட உலகில் டைரெக்டர் என்பவர் மிக முக்யமானவர் என்பதை யாரும் மறுக்கமுடியாது. படத்தின் வெற்றியும், தோல்வியும் அவருக்குத்தான் சொந்தமானது.

டைரெக்டர்கள் தாங்கள் டைரெக்ட் செய்த படங்கள் நன்றாக இருக்கின்றனவா, இல்லையா என்பதைப் பத்தி

*பரிசு பெற்ற கடிதம்

எழுதியவர் :

ஏ. ராஜா,

கோயமுத்தூர்.

குறிப்பு :

முழு விலாஸம் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

ரிகை விமர்சனம் மூலம் அறியலாம். அல்லது படத்தின் வருகையைக் கொண்டும் அறியலாம். எனினும், பொதுஜனங்கள் தம் படத்தைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிய அவர்களுடன் கலந்து பழக வேண்டும். மேலும் படத்தில் உள்ள குறைபாடுகளையும், ரஸிகர்கள் படத்தில் வரும் சம்பவங்களை எப்படி ரஸிக்கிறார்கள் என்பதை பாரபட்சமின்றி சொல்பவரிடம்தான் தெரிந்து கொள்ள முடியும். அப்படித் தெரிந்து கொள்வதால் அவர் அடுத்தபடியாக டைரெக்ட் செய்யும் படத்தில் அவைகளைத் திருத்திக் கொள்ள முடியும். இதற்கு டைரெக்டர்கள் தங்கள் படம் வெளியானதும் தியேட்டருக்கு வந்து ரஸிகர்கள் வாய்விட்டுச் சொல்வதைக் கேட்க வேண்டும். இதற்கு அவர்கள் ரஸிகர்களில் ஒருவராகக் கலந்து கொண்டால்தான் முடியும்.

படத்தொழிலை முன்னேற்றமடையச் செய்யவும், தாம் சிறந்த டைரெக்டர் என்று மேலும் புகழடையவும் விரும்பும் எவரும் இப்படிச் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

சி. பொன்னம்பலம்,
அருப்புக்கோட்டை.

இரண்டு மைல் கல்கள்

1949-ம் வருஷம் ஜுலை 28-ந் தேதி தமிழ்நாட்டு திரைப்பட உலகம் ஒரு மைல் கல்லைத் தாண்டிவிட்டது. தமிழ்நாடு தனக்கென ஓர் அகில இந்திய சினிமா மார்க்கெட்டை திறுவிக் கொண்டு விட்டது. இமயம் முதல் குமரி வரை வெற்றி முரசு கொட்டிவரும் 'ஜெமினி சந்திரலேகா' வடநாட்டிலும் வெள்ளி விழா கொண்டாடிய இந்நாள் இந்திய சலனப்பட சரித்திரத்தில் ஓர் நன்னாளாகும். இந்தக் காரியத்தை சாதித்த 'ஜெமினி'யை தமிழ்நாட்டினர் பாராட்ட வேண்டும்.

இன்னொரு மைல் கல்லையும் நாம் தாண்டியாக வேண்டும். அயல் நாடுகளிலும் நமக்கென ஓர் சினிமா மார்க்கட்டை ஸ்தாபித்துக் கொள்ளவேண்டியதே நமது அடுத்த வேலை. இந்தப் பகீரதப் பிரயத்தனத்தைச் செய்ய முன்வரப்போகும் சினிமா தயாரிப்பாளர் ஓர் சின்னஞ்சிறு விஷயத்தைத் தங்கள் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

இதுவரை நம் நாட்டு ரஸிகர்களை திருப்தி செய்வதற்காகவே படங்கள் தயாரிக்கப்பட்டன. இந்தப் படங்களில் இந்தியக் கலாசாரம், இந்தியர்களின் நடை, உடை, பாவனைகள் இவைகளை சரிவரச் சித்திரிக்க நம் படத் தயாரிப்பாளர் இதுகாறும் அக்கறை கொள்ளவில்லை. ஆனால் இனி அயல் நாட்டிற்கென தயாரிக்கப் பெறும் எந்தப் படமும் இந்தியக் கலாசாரப் பின்னணியிலேயே உருவாக்கப்பட வேண்டும். கதை, வசனம், சங்கீதம், நாட்டியம், உடை இவை அனைத்திலும் கலப்பற்ற இந்தியக் கலாசாரத்தின் பெருமையை மட்டும் சித்திரிக்கும் சமூக, புராண, சரித்திரப்படங்களே அயல் நாட்டில் திரையிடப் படவேண்டும். 'இந்தியாவின் உண்மையான கலாச்சாரந்தான் என்ன' என்பதை மேல்நாட்டினர் உணரவேண்டிய காலம் வந்து விட்டது. இந்த சீரிய தொண்டில் தமிழ் நாட்டுச் சினிமா உலகம் தனக்குரிய பங்கைச் சரியான முறையில் செய்து முடிக்க வேண்டும். படத் தயாரிப்பாளர் கவனிப்பார்களாக.

கீ. வா. ராஜகோபாலன்,
(விலாஸம் தேவை).

மனித ஊழியம்

நம் இந்தியாவில் இன்னும் அதிகமாக கல்வித்துறையில் முன்னேறாதவர்கள் இருக்கிறார்கள். நம்மை ஆட்டிவைத்த ஏகாதிபத்தியம்தான் நம்மை முன்னேற முடியாது செய்தது. அகமும், புறமும் ஒத்த வாழ்வே மனித வாழ்வாகும். அவ்வாழ்க்கை சுகமாக இருத்தல் வேண்டும். அதுவே மனிதன் மனித வர்க்கத்திற்குச் செய்யும் ஊழியமாகக் கருதப்படும். தற்போது ஓரளவு நாம் அகத்தே அரசியலைப் பெற்றுள்ளோம். இச்சமயத்தில் நாம், இந்தியாவில் முன்னேறாத மக்களை முன்னேற்றுவது நம் கடமை.

இக்கடமையை நாம் இந்தியா பூராவும் அமல் நடத்த வேண்டுமானால் சினிமாக் கலையை முன்னணிக்குக் கொண்டு வருவது அவசியம். சரித்திர சம்பந்தமான படங்களும், இயற்கைப் படங்களும், சுகாதாரப் படங்களும் அதிகமாக எடுக்க வேண்டும். உலகில் மனிதனின் கடமை என்ன? பிறருக்காகவே வாழும் பெருமை கொண்ட மனிதன், இன்று நாகரீக உலகில் அநாகரீகமான செயலைச் செய்யத் தொடங்கி விட்டான். மனித ஊழியம் என்ன என்பதையே மறக்கடித்து விட்டது இக்கால வாழ்க்கையும், சினிமாக் கலையும்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்" என்று நந்தமிழ்ப் பெரியார் ஓதினார். உயர்வு, தாழ்வு, தீண்டாமை இம்மூன்றையும் சினிமாவில்

புகுத்தல் கூடாது. மற்றும் சினிமாவில் ஆபாஸமான கட்டங்களை எடுத்தலும், நாஸ்திகப் பிரசாரம் போன்றவைகளைப் புகுத்துதலும் மனிதனின் இயற்கை அறிவையும் மழுப்பி விடும் என்பதில் ஐயமில்லை.

படமுதலாளிகள் தங்களுடைய புகழுக்காகப் படத்தை எடுக்க வேண்டாம். அல்லது ஒரு மஹோன்னத வெற்றிக்காக ஆபாஸமான படங்களைத் தயாரிக்க வேண்டாம். அறிவை மேன்மேலும் வளர்க்கக்கூடிய சிறிய துண்டுப் படங்களைத் தயாரித்து புகழை அடைவார்களாக.

இனிமேலாவது படமுதலாளிகள் புகழை வெறுத்து, மக்களின் முன்னேற்றமே தம்முடைய பெரும் புகழென மதித்து, படமுதலாளியான நாம் மனித ஊழியத்திற்கென தம் வேலையைச் செய்து மக்களை முன்னேற்றுவார்களேயானல் இந்தியா பூராவும் அப் படமுதலாளிக்கு நன்றி பாராட்டும்.

கி. தர்மராஜ்,
மேட்டுப்பாளையம்.

நாகர்கோயில் சுப்பையா பிள்ளையின் புத்திரி சுபத்ராவின் நடனத்தை 'நாட்டியராணி'யில் காணலாம்

அரசாங்கத்தின் கடமை!

எங்கள் ஊர் சினிமா கொட்டகையை நினைத்தாலும், கேட்டாலும் அதில் ஒரு புது உணர்வு. அதுவும் ஊருக்கு ஒரே ஒரு தியேட்டராக இருந்து விட்டால் கேட்கவாவேண்டும்? அதைப்பற்றி சொல்லுமுன் இருப்பிடத்தைப் பற்றிக் கூறுவது நல்லது. ஒருபுறம் மேட்டுப்பாங்கான இடத்தில் ரயில்பாதை, எதிர் புறம் கால்நடைகள், வண்டிகள், மோட்டர்கள் தவழக்கூடிய ரஸ்தா. வலது புறம் கோட்டைச் சுவற்றைப் போன்று உயர்ந்துள்ள குளக்கரை. ரயில்பாதையை அடுத்தாற் போல் கடல்போல் பரந்துள்ள நீர் பரப்பு. இவ்வித நாற்புற சூழ்நிலையில் அமைந்திருக்கும் இக் கொட்டகையைக் காண்போரின் கண்களை வசீகரித்து, அதைப்பற்றி ஆராய அனுமதிக்கிறது. மழைக்காலத்தில் பின்புறம் உள்ள ஏரியையும் கொட்டகை அமைந்துள்ள பள்ளத்தையும் தண்ணீர் ஒன்று சேர்க்கும். ரயில் பாதையினுள்ள பாலமோ மத்தியதரைக் கடலையும் அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தையும் இணைக்கும் ஜிப்ரால்டர் ஜலசந்தியை ஒத்திருக்கும்.

வருணன் மனது வைத்தால் கொட்டகை முத்துக் குளிக்கும், ஒரு நீராழி மண்டபம் போல் தோன்றும். தவிர, இவ் வூர் வாசிகளில் பெரும்பாலோர் தங்களாலியன்ற மலஜலங்களை கொட்டகையைச் சுற்றி செய்வார்கள்.

பொதுமக்கள் தாங்கள் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் என்று நினைத்து அக்கொட்டகைக்குப் போகத் தவறுவதில்லை. அவர்கள் அன்பைப் பெறக் கொசுப் பட்டாளங்கள் துடிதுடித்துக் கொண்டுவந்து நாசியிலும் செவியிலும் குடியேறி அவர்களுக்கு வேண்டிய சுறுசுறுப்பையும், இன்பகானத்தையும் அளிப்பதுடன் அதுதான் தங்கள் வாழ்க்கையின் லக்ஷியம் எனக் கொண்டுள்ளன.

கொட்டகையினுள் கடைசி வரிசையில் முதல் வகுப்பு என்று பெயர் பெற்ற கூடைகள் சில போடப்பட்டுள்ளன. அவை பல்லாயிரக்கணக்கான உயிர்களுக்கு உறைவிடமாயிருப்பது போற்றத் தக்கதாகும்! அதில் அமர விரும்பும் அத்தனை பேரும் ரத்ததானம் செய்யத் தயாராயிருக்கவேண்டும் இல்லையேல் அவைகள் மனம் நொந்து வேறு இடங்களில் குடியேறிவிடும்! அவைகள் மேல் இரங்கி அருள் புரியும் ஆஸ்திகர்கள் அநேகம் பேர். ஆனால் இவ்வளவு சௌகரியங்களுக்கிடையில் ஆபத்தும் எச்சரிக்கிறது. சுற்றிலுமுள்ள சுவர்கள் படம் பார்க்கவரும் பாபிகளைப் பாதாள உலகத்திற்குப் பார்ஸல் செய்ய

'பிளான்' போட்டு இருப்பதற்கு அறிகுறியாக அதில் அநேகம் பிளவுகள் 'ஆ'வென்று வாயைத் திறந்துகொண்டு இருக்கின்றன. அதுமட்டுமா, மேலே சரக்கூடம் போட்டாற்போல் எட்டுக்கால் ஜந்துக்களின் இல்லங்கள் ஊஞ்சலாடிக் கொண்டிருக்கின்றன. இக்கொட்டகையானது மானிட இனம் அல்லாது இவ்வூரிலுள்ள பெரும்பாலான பிராணிகளுக்கும் தன் அன்பை அள்ளி வீசுகிறது.

இவ்விதமான கொட்டகைகள் பொது நலச் சுகாதாரத்துக்கு உகந்தவைகளாயிருந்தால் அரசாங்கம் ஊக்கம் அளிக்கட்டும்; இல்லையேல் அவைகளைச் சீர்திருத்த எச்சரிப்பது அரசாங்கத்தின் கடமைகளில் ஒன்றாகும்.

வி. பி. கே. மூர்த்தி,
செங்கற்பட்டு.

துண்டுப்பட தணிக்கைக் கமிட்டி

தியேட்டர்களில் திரையிடப்படும் துண்டுப் படங்களைத் தணிக்கை செய்ய பின் கண்ட அங்கத்தினர்கள் அடங்கிய ஒரு கமிட்டியை சர்க்கார் இம் மாதம் 11-ம் தேதி நியமித்திருக்கின்றனர். (1) சர்க்காரின் ஆரம்பக் கல்வி டிபுடி டைரெக்டர்(2) யு. கிருஷ்ணராவ், (3) முசிரி சுப்ரமண்ய அய்யர், (4) நாரள வெங்கடேஸ்வர ராவ், (5) மஞ்சுபாஷிணி (6) எம். ஆர். விட்டல், (7) புரபஸர். கே. ஸ்வாமிநாதன், (8) பி. எஸ். கைலாஸம், (9) ஏ. ஸி. கிருஷ்ண ராவ், (10) இ. ஞானதிக்கம். ஆரம்பக் கல்வி டிபுடி டைரெக்டர் இந்தக் கமிட்டியின் காரியதரிசியாக இருப்பார்.

மகிழ்ச்சி நாடகசபை

திருத்துறைப் பூண்டியில் மகிழ்ச்சி நாடக சபை என்ற புதிய நாடகக் கம்பெனி ஆரம்பமாகி யுள்ளது. இவர்களது முதல் நாடகம் **வாழப் பிறந்தவள்** என்பதாம்.

வாஹினி பொழுது போக்குச் சங்கம்

சென்னை வாஹினி பொழுது போக்குச் சங்கத்தினர் வி. எஸ். மணியின் "வெற்றி" என்ற நாடகத்தை நடிக்க ஏற்பாடு செய்து வருகின்றனர்.

வாசக நேயர்களுக்கு

"பொது ஜனம் பேசுகிறார்" என்ற பகுதி சினிமாக் கலை அபிவிருத்திக்காகவும், நேயர்கள் குறைகளை எடுத்துச் சொல்லவுமே ஏற்பட்டது. ஆனால் இதை அவர்கள் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

நேயர்கள், தாம் எழுதியது பத்திரிகையில் வெளிவர வேண்டும் என்ற எண்ணத்தில் ஒருவர் கூறியதையே திரும்பத் திரும்ப எழுதி வருகின்றனர். இது தவறு. தியேட்டர்களின் குறைபாடுகள், படங்களில் உள்ள ஆபாசக் காட்சிகள், அதில் உள்ள இதர குறைபாடுகள் இவைகளை வேண்டுமானால் அது சீர்திருந்தும்வரை எத்தனை முறை வேண்டுமானாலும் எழுதலாம். மற்றபடி ஒருவர் கூறிய ஒரு சாதாரண குறையைப் பலர் கூறுவதில் பலனே இல்லை. மேலும் சில நேயர்கள் படங்களின் விமர்சனங்களை எழுதி அனுப்புகின்றனர். 'குண்டூசி'யில் பிறர் விமர்சனங்களைப் போடுவதில்லை என்பதை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

நேயர்கள் முக்கியமாக ஒன்றைக் கவனிக்க வேண்டும். பொதுஜனம் பேசுகிறார் பகுதிக்கு எழுதுபவர்கள் கட்டாயம் தங்களுடைய சரியான விலாஸத்தைத் தெரிவிக்க வேண்டும். இல்லையேல் இனி அம்மாதிரி கடிதங்களை (எவ்வளவு நல்லதாக இருந்தாலும்) பிரசுரிக்க இயலாது.

"பொதுஜனம் பேசுகிறார்" பகுதிக்கு எழுதுபவர்கள் அது சம்பந்தமாக கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ள வேண்டாம். அதற்கெனப் பிரத்தியேகமாக தபால் பில்லைகளும் அனுப்ப வேண்டியதில்லை. எழுதிய கடிதம் நல்ல கருத்துடையதாக இருந்தால் கட்டாயம் பிரசுரமாகும். ஒவ்வொரு மாதமும் பிரசுரமாகும் கடிதங்களில் சிறந்த ஒன்றிற்கு (கடிதம் எழுதியவருக்கு) ஆறு மாத காலம் "குண்டூசி" இனமாக அனுப்பப் படும்.

—ஆசிரியர்.

பாவம்

ஆறுமுகம் பிள்ளை!

நாகர்கோயில்
கே. பத்மனுபன்

ஆறுமுகம் பிள்ளையின் ''அரோஹரா'' எங்களூரில் முகாம் போட்ட. ஆரம்பித்து இரண்டு வாரம் கூட ஆகவில்லை. (வித்தியாசமாக நினைக்க வேண்டாம்; "அரோஹரா" என்ற பெயருடைய அவரது நாடகக் கம்பெனிதான் எங்களூரில் முகாம் போட்டிருந்தது.) இரண்டே வார காலத்திற்குள் அதன் பெயர் எங்கும் முழங்க ஆரம்பித்து விடடது; ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான ஜனங்கள், நாடகம் பார்க்கத் தியேட்டரை முற்றுகையிட்டனர்; இடம் கிடைக்காது வீடு திரும்பியவர்களின் எண்ணிக்கையோ, நாளுக்குநாள் அதிகமாகி வந்தது; ஊரில் எங்கே திரும்பினலும், யாரைப் பார்த்தாலும் நாடகத்தைப் பற்றிய பேச்சாகவே இருந்தது! அப்போது "வள்ளித் திருமணம்" நாடகம் நடந்து கொண்டிருந்தது.

"ஒரு சாதாரண வள்ளி நாடகத்தைப் பார்க்கவா இவ்வளவு கூட்டம்?......... ஹும்! அப்படித் திரும்பத் திரும்பப் பார்க்க அதில் என்னதான் இருக்கிறதோ!" என்று நான் நினைத்தேன். எனது அபிப்பிராயத்தை என் நண்பர் நாராயணனிடம் சொன்னேன். அவர் ஒரு முரட்டு ரஸிகர்; எவ்வளவு நல்ல சினிமாவோ, நாடகமோ வந்தாலும் அவருக்குத் திருப்தியாகாது! வள்ளி நாடகத்தையும் ஒரு விளாசு விளாசி விடுவார் என்று நினைத்தேன். ஆனால் அந்த பொல்லாத மனுஷன் ஒரு அவுட்டுச் சிரிப்புடன், "ஓய், பைத்தியக்கார மனுஷா! ஒரு தடவை அந்த நாடகத்தைப் போய் பார்த்துவிட்டு வாரும்; அபபுறம் நீர் இந்த மாதிரி யெல்லாம் பேசமாட்டீர்! அடடா....நாடகம்னு அதைத்தான் சொல்லணும்...அதிலும் அந்த வள்ளியின் நடிப்பையும் பாட்டையும், கேட்கவும் பார்க்கவும் ஆயிரம் தடவை நாடகம் பார்த்தாலும் போதாதே! என்ன அழகு, என்ன செ, சு! இதிலெல்லாம் பெரிய ஆச்சரியம் என்னதெரியுமா? வள்ளியாய் ஆக்ட் பண்றது பெண் இல்லை! அசல் ஆண் பிள்ளைதான்...ராஜபார்ட் ரங்கசாமின்னு எல்லாரும் பிரமாதமா புகழுரு பாரும்... அந்தப் பையன்தான் வள்ளியாய் ஆக்ட் பண்ருன்...ஓய் மனுஷா! வாயைப் பிளக்காதேயும்...இந்த பூமியில் மானிட ஜென்மம் கடைத்தேற, 'ஒரு நாள் ஒரு பொழுதாகிலும்' அந்த நாடகத்தைப் பாரும்" என்ருர்.

நான் பதில் பேசவில்லை.

அன்று சாயங்காலம், நாடகக் கம்பெனி முதலாளி ஆறுமுகம் பிள்ளையைப் பார்த்தேன். வெகு காலமாகவே எனக்கு அவரைத் தெரியும். பத்து வருஷங்களுக்கு முன்பு அவர் என் வீட்டின் சமீபம்தான் வசித்திருந்தார். அந்த நாளிலே நாங்களிருவரும் ஆப்த நண்யர்கள். ஊர்ரை விட்டுப் போன பிறகு, மீண்டும் நான் அவரை இப்போதுதான் பார்க்கிறேன். அதுவும் ஒரு பெரிய நாடகக் கம்பெனியின் முதலாளியாக அவர் மாறிய பிறகு.

என்னைக் கண்டதும் அவர் முகம் பலர்ந்தது. "வா. வா! உட்காரு... ஊருக்கு வந்தவுடனேயே எனக்கு உன்னைப் பார்க்க வேணுமென்ற ஆசை! ஆனல் அதற்கு ஓய்வே கிடைக்கலே. நாடகம் பார்த்தாயோ?". என்று அன்பு ததும்பக் கேட்டார்.

"இன்னும் பார்க்கவில்லை. சௌகரியமாய்ப் பார்க்கலாமே, இந்த கூட்டத்தில் வந்து இடிபடுவானேன் என்றிருந்தேன்...உங்கள் குழந்தைகளெங்கே?" என்று கேட்டேன்.

"எல்லோரும் கும்பகோணத்தில் சௌக்கியமாக இருக்கிருர்கள்" என்று கூறிவிட்டு, "ரங்கு...ரங்கு!" என்று பிள்ளை, யாரையோ அழைத்தார். சிறிது நேரத்தில், பதினுன்கு வயது நிரம்பிய ஒரு பையன் எங்கள் முன் வந்து நின்

பரணியின் தெலுங்கு, தமிழ் "லைலா மஜ்னு"வில் லலிதா பத்மினி இப்படிக் காட்சி அளிக்கிறார்கள்.

றான். "இவன் தான் ரங்கசாமி...நம்ம கம்பெனி...ஸ்திரீ...ராஜபார்ட்!" என்றார் ஆறுமுகம் பிள்ளை, சிரிப்புடன். நான் வாயே திறக்கவில்லை!

ரங்கசாமியின் களங்கமற்ற முகமும், அந்த முகத்திலே கொட்டிக் கிடந்த அசாதாரணமான அழகும், தேன் குடிக்க அலையும் கருவண்டுகளைப்போல் குறுகுறுத்த விழிகளும், என்னைப் பேசவொட்டாமல் அடித்துவிட்டன! பதினான்கு வயதுப் பாலகன் மாதிரி அவன் தென்படவில்லை! பாரிஜாத மலரைப் பறிக்க வரும் தேவலோக அழகிகளைப் போலிருந்தான்!!

"தம்பி! நம்ம வள்ளி நாடகத்திலே இவன்தான் ஸ்திரிபார்ட். பாட்டு ரொம்ப பிரமாதமாயிருக்கும்; உங்க அப்பாவுக்குப் பிடித்தமான பைரவி ராகத்தை ரங்கசாமி பாடி நீ கேட்கணும். இன்னிக்குநாடகத்தைப் பார்த்து விட்டுச் சொல்லேன்" என்றார் ஆறுமுகம் பிள்ளை. சிறிது நேரம் இருவரும் பேசிக் கொண்டிருந்தோம். பிள்ளையின் பேச்சு, முழுக்க முழுக்க ரங்கசாமியைப் பற்றியே இருந்தது. "ராத்திரி சந்திக்கலாம்" என்று கூறிவிட்டு நான் கிளம்பினேன்.

அன்றிரவு "வள்ளித்திருமணம்" நாடகம் பார்க்கப் போனேன். எள் போட்டால் எண்ணெயாகி விடும்; அவ்வளவு கூட்டம் தியேட்டரினுள் அடைந்து இருந்தது. சரியாக ஒன்பது மணிக்குத் திரை உயர்ந்தது. வள்ளி தினைப்புனம் காவல் செய்யும் காட்சிதான் முதல் ஸீன். "ஊரெல்லாம் புகழும் வள்ளி தோன்றப் போகிறாள் (ன்?)" என்றெண்ணியதும் என்மனம் படபடத்தது. அதே சமயத்தில், "ஆலோலம்" என்ற பாட்டுடன் வள்ளி மேடை மீது தோன்றினாள்.

நான் மெய்மறந்து விட்டேன். "ஆலோலம்" என்று தன் கொஞ்சும் குரலில் வள்ளி பாடும் போதெல்லாம், "அடடா! நாமும் இப்போது ஒரு பறவையாயிருக்கக் கூடாதா?" என்ற நினைப்பு சபையிலிருந்த ஒவ்வொருவருக்கும் நிச்சயமாகத் தோன்றியிருக்கும். அசல் பெண்குரல்; அற்புதமான சாரீரம், 'ஏதோ சுமாராக இருக்கும்' என்று எண்ணிக் கொண்டிருந்த எனக்கு முதல் ஸீனில் அந்த வள்ளியைப் பார்த்த பிறகு அடியோடு மாறிவிட்டது, பிறகு, நாடகம் முடியும் வரையிலும் நான் நினைவின்றியே இருந்தேன். வள்ளி வேஷம் பூண்ட ரங்கசாமியின் அபூர்வமான நடிப்பும், பாட்டுமே என்னை அப்படி மெய்மறக்கச் செய்தன.

நாடகம் முடிந்தது.

"அபாரம்" என்ற அபிப்பிராயத்துடன் நான் வீடு திரும்பினேன். "அரோஹரா" கம்பெனி மூன்று மாத காலம் எங்களூரில் ஜெயகோஷம்புரிந்து விட்டு சென்னை நோக்கிப் புறப்பட்டது. சென்னையிலும் ஆறுமுகம்பிள்ளை வெற்றிக் கொடி நாட்டினார். ரங்கசாமி சென்னை வாசிகளை எளிதில் கவர்ந்து விட்டான். சென்னை யெங்கும் அவன் பெயர் முழங்கியது; பத்திரிகைகளெல்லாம் அவனைப்பற்றி பத்தி பத்தியாகப் புகழ்ந்தெழுதின. இவ்வளவு தூரம் பெயர் பெற்றவனை, சினிமா முதலாளிகள் விட்டு வைப்பார்களா? "விநாயகா பிலிம்ஸ்" முதலாளி கணபதி, ரங்கசாமியை எப்படியும் தமது வலைக்குள் இழுத்துப் போடத் தீர்மானித்தார். ஆறுமுகம் பிள்ளையின் அனுமதியைக் கேட்டார்; ஆனால், பிள்ளை, சம்மதிக்கவில்லை. "ரங்கசாமி என் சொத்து; அதை வேறு யாரும் அனுபவிக்க முடியாது!" என்றார். ஆயினும் கணபதி, விடாமல் முயற்சி செய்து, கடைசியில் வெற்றியும் பெற்று விட்டார். அதன் பயனாக ரங்கசாமி நாடகத்திற்கு ஒரு முழுக்குப் போட்டு விட்டு, சினிமா உலகிற்கு வந்து சேர்

தான். அவனது பிரசித்தி பெற்ற "வள்ளி" நாடகமே சினிமாவாக எடுக்கப்பட்டது. ரங்கசாமி வள்ளியாக நடித்தான். வேலன் வேஷத்தில் நடிக்க, பிரபல நடிக சங்கீத நடன கலாமணி சோணசல பாகவதர் "புக்" செய்யப்பட்டார். படமும் வெளி வந்தது.

நாடகத்தைவிட, ஆயிரம் மடங்கு அபூர்வமாக, ரங்கசாமி "வள்ளி மணவாளன்" படத்தில் நடித்துப் பாடியிருந்தான். சோணசல பாகவதரும் ஜமாய்த்திருந்தார். ரங்கசாமியின் புகழ் நாடெங்கும் பரவியது. படத்தைப் பார்த்தவர்கள், "அடே! ஒரு ஆண் பிள்ளையா இவ்வளவு நன்ருக நடித்திருக்கிருன்?" என்று நம்ப முடியாமல் தவித்தார்கள். பெண்களால் கூட அவ்வளவு இயற்கையாக நடிக்க முடியாதென்ருல் பார்த்துக் கொள்ளுங்களேன்! நானும் படத்தைப் பார்த்தேன். எனக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி. "சபாஷ் பிள்ளைவாள்! ஒரு உயர்ந்த நடிக மணியை சினிமா உலகிற்கு அளித்த உம்மை எவ்வளவு பாராட்டினுலும் போதாது" என்று நினைத்துக் கொண்டேன். அந்த சமயம், ஆபீஸ் விஷயமாக எனக்குச் சென்னை போகவேண்டி வந்தது. ஆறுமுகம் பிள்ளையையும் ரங்கசாமியையும் பார்க்க நல்ல சந்தர்ப்பம் என்றெண்ணி சந்தோஷப்பட்டேன்.

சென்னையில் ஆபீஸ் வேலைகளையெல்லாம் துரிதமாக முடித்துக் கொண்டு ஆறுமுகம் பிள்ளையின் பங்களாவை நோக்கி விரைந்தேன். பங்களாவின் நடு ஹாலில் அவர் படுத்துக் கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் "வா, தம்பி, வா!" என்று உபசரித்தார். ஆனுல் அவர் குரலில் பழைய உற்சாகத்தைக் காணவில்லை; சோகம் தொனித்தது. "சௌக்கியமா? ரங்கசாமி எங்கே?" என நான் ஆவலுடன் கேட்டேன்.

பெருமூச்சுடன் அவர், "இதைப் படித்துப் பார்" என்று கூறி, ஒரு பேப்பரை என்னிடம் நீட்டினுர். அதில் ஒரு பக்கத்தில் ரங்கசாமி பெண் உடையில் இருப்பதைப்போல் ஒரு படம் இருந்தது; அதன் கீழ் பின் வருமாறு எழுதியிருந்தது:—

"சினிமா உலகிலே ஒரு சினிமா!

நடிகர் நடிகரை மணந்த வித்தை! தமிழ் நாட்டின் "பிளாரென்ஸ் நைட்

குடந்தையில் பிரசித்திபெற்ற
காட்சிசாலை

தாங்கள்
ஒரு முறை
நேரில் விஜயம்
செய்யுங்கள்
*
உங்கள் மனதிற்கு
இன்பத்தைக்
கொடுக்கக் கூடிய

பம்பாய் தேவி தயாள்
கம்பெனியார் தயார் செய்யும்
"ஸ்டேபிரைட்"
பாத்திரங்களும்

சிறந்த R. C. A.
ரேடியோக்களும்,
பீட்டர்பேன் பாட்டரி செட்
ரேடியோக்களும்

எங்களிடம் உள்ளன.

MUHIL.

R. D. S. ராஜன் அண்டு சன்ஸ்
136, பெரியதெரு . . . . . கும்பகோணம்

டிங்கேல்" என்று புகழ் பெற்றவரும், பெண் வேஷ நடிப்பில் பெயர் பெற்றவருமான நடிகர் ரங்கசாமி, நடிக சங்கீத நடன கலாமணி சோணுசல பாகவதரை மணந்து கொண்டார். இதுவும் ஏதாவது "சினிமாவாக இருக்குமோ?" என்று சந்தேகப்பட்ட நாம், எமது பிரத்தியேக நிருபரை அனுப்பி உண்மையை அறிந்து வரச் சொன்னேம். சினிமாவில் கூட காண முடியாத பல திடுக்கிடும் செய்திகளை எமது நிருபர் வெளியிடுகிறுர்!

"இதுவரையிலும், பெண்வேஷ நடிகர் ரங்கசாமியை நாம் ஒரு ஆண்பிள்ளை என்றே நினைத்திருந்தோம். ஆனல் "அவர் ஒரு ஸ்திரீ"யாம்! இவ்வளவு காலமும் அவரை வளர்த்து வந்த ஆறுமுகம் பிள்ளையின் அபூர்வத் திறமையினுல் தான் ரங்கசாமி பெண் என்ற விவரம் வெளிவராமலிருந்தது. ஆயினும் இயற்கை, குட்டை வெளிப்படுத்தி விட்டது! பெண்களுக்கு இயல்பான காதல் வியாதி ரங்க(நாயகி?)சாமியையும் பிடித்து, சோணுசல பாகவதர் மேல் பாய்ந்து விட்டது! நாளொரு வண்ணமும் பொழுதொரு அகலமுமாய் வளரும் பூஷிணிக்காயைப்போல் அவர்கள் காதலும் வளர்ந்து, கடைசியில் கல்யாணத்தில் போய் முடிந்தது! 'இனியும் தாங்கள் படங்களில் நடிப்பீர்களா?' என்று நமது நிருபர் கேட்டதற்கு, தான் இனிமேல் ஆண் வேஷங்களில் நடிக்கப் போவதாக, ஸ்ரீமதி ரங்கசாமி(!) கூறினுளாம்!

ரங்கசாமி நிஜமாகவே பெண்ணுக இருக்க வேண்டும் என்று, அவரது பெண் வேஷ நடிப்பைப் பார்த்து விட்டு அல்லும் பகலும் உருகும் ஆயிரக்கணக்கான ரஸிக மஹா ஜனங்களின் மனம் இனியாவது சாந்தியடையும் என்று நம்புகிறேம்!"

இந்தச் செய்தியைப் படித்ததும் எனக்கு வியப்பு தாங்க முடியவில்லை "இதெல்லாம் உண்மைதானு?" என்று கேட்டேன்.

ஆறுமுகம் பிள்ளையின் கண்களில் நீர் ததும்பியது; தடுமாறிய குரலில் "ஆமாம்... உண்மைதான்... அதெல்லாம் பெரிய கதை தம்பி! உலகத்தை ஏமாற்ற நான் நினைத்தேன். ஆனல் நானே ஏமாறி விட்டேன்! தம்பி நான் இந்த ஊரை விட்டு தென் காசிக்குத்தான் முதல்லே போனேன். இந்த ஊருன்னு சென்னையிலே.. உங்க ஊரு ...தென் காசியிலே அகஸ்மாத்தா...எங்கிட்டே ஒரு அனுதைப் பெண் வந்து சேர்ந்தது. வள்ளி என்ற பெயரோடே அதை வளர்த்தேன். சின்ன வயசிலேயே அது நல்லா பாடும்; நல்ல சாரீரம்; லெக்ஷணமாகவு மிருந்தது. இந்தக் காரணத்தினுல் தான் எனக்கு அவளை வச்சு ஒரு நாடகக் கம்பெனி நடத்தணும் என்ற ஆசை பிறந்தது; நாடகக் கம்பெனியும் ஆரம்பிச்சேன்; அப்பொ என் புத்தி சரியாத்தான் இருந்தது. ஆனல் வள்ளியுடைய சங்கீதமும் நடிப்பும் என் புத்தியை மாறச்செய்தது. உலகத்துக்கு, வள்ளியை ஒரு ஆம்பிள்ளைன்னு சொல்லி ஏமாத்த நினைச்சேன். ரங்கசாமின்னு பேர் வச்சேன். நடை, உடை, பாவனை எல்லாம் அசல் ஆண் பிள்ளை மாதிரி ஆக்கினேன். பதினுறு வயசு வரை அவளை அதிகமாய் மற்ற ஆண் பிள்ளைகளுடன் பழகவிடாமல் தடுத்து வந்தேன். கடைசியிலே இந்த சினிமா வந்து என் கோட்டையை இடிச்சுடுத்து. அந்த நடியன் சோணுசல பாகவதர் கூட காதல் காட்சிகளிலே நடிக்க ஆரம்பிச்சதும் பெண்மை தலை தூக்க ஆரம்பிச்சது தம்பி! ஊரெல்லாம் சிரிக்குது! என் மானம் போகுது!" என்றுர். நான் அவரைத் தேற்றினேன். அவர் சாமர்த்தியமாக செய்த காரியங்களை இயற்கை ஏமாற்றிவிட்டதை எண்ணி மனம் புழுங்கியவண்ணம் ஊர் திரும்பினேன்.

• • •

அரோஹரா கம்பெனி, ஆறுமுகம் பிள்ளையின் கவனிப்பில் இப்போதும் பிரமாதமாக நடந்து வருகிறது. பாரோ நாகராஜனும், ஒரு பையன், ஸ்திரீ பார்ட்டாக ரொம்பவும் அழகாக நடிக்கிருனும்.

ஆனல் எனக்கு நம்பிக்கையில்லை. அந்த நாகராஜன், நாகம்மாளாக மாறும் காலத்தைத் தான் நான் பெரிதும் எதிர்பார்க்கிறேன்!

புகாருக்கு மறுப்பு

சினிமா நடிகை வி. என். ஜானகி போலீஸாருக்குப் புகார் செய்தது பற்றி ஒரு செய்தி சென்ற மாத "குண்டூசி"யில் பிரசுரமாகியது. இதை ஆட்சேபித்து எம். நாராயணன் என்பவர் ஒரு கடிதம் எழுதியிருக்கிறுர். சினிமா நடிகையின் புகாரை ஒரு செய்தியாகக் கருதியே நாங்கள் பிரசுரித்தோம். புகாரில் குறிப்பிடப்பட்ட எவர் மீதும் எங்களுக்குத் துவேஷம் கிடையாது. குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டவர்கள் இதுபற்றி மனவருத்தம் கொள்வதால் செய்தியைப் பிரசுரித்ததற்கு வருந்துகிறேம்.

வருகிறது!
வாழ்க்கை
AVM
புரொடக்ஷன்ஸ்
G.H.RAO

அழகாபுர் ராஜகுமாரி இன்பவல்லியும், மந்திரி குமாரன் அன்பழகனும் சிறு பிராயத்திலிருந்தே நெருங்கிப் பழகி வந்தனர். பருவமடைந்த பின் அவர்களின் அன்பு காதலாக மாறியது. அதை உறுதி செய்ய தங்கள் முத்து மாலையையும் மாற்றிக் கொண்டனர். அன்பழகனுடன் இன்பவல்லி பழகி வருவதை ராணி விரும்பாமல், அன்பழகனை எச்சரிக்கிறாள். இன்பவல்லியையும் காவலில் வைக்கிறாள். அன்பழகனும், இன்பவல்லியும் தோழியின் உதவியால் ரகசியமாக அடிக்கடி சந்தித்து வருகிறார்கள். ராஜ அந்தஸ்திற்குத் தகுந்தாற் போல் இன்பவல்லியை, ராஜகுமாரன் ஒருவனுக்கு மணம் செய்ய ஏற்பாடு செய்கிறாள் ராணி. விவாக ஏற்பாடு செய்வதை அறிந்த காதலர்கள் இருவரும், முன் ஏற்பாட்டின்படி நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். இன்பவல்லியைக் காணாத பெற்றோர் வருந்தி தூதர்களை நான்கு திசைகளிலும் தேட அனுப்புகிறார்கள்.

ஊரை விட்டு வெளியேறிய இன்பவல்லியும், அன்பழகனும் பத்மபுரி எல்லையிலுள்ள குகைக்கோவிலில் சிறிது நேரம் தங்குகிறார்கள். அங்குள்ள அழகான சிலைகளையும் சிற்பங்களையும் பார்த்து புகழ்கிறார்கள். இன்பவல்லி தன் முத்து மாலையை ஓர் சிலையின் கழுத்தில் போட்டு ஆனந்தமடைகிறாள். மற்ற சிலைகளின் கவர்ச்சியைக் கண்டு ஆனந்தித்த காதலர்கள் மாலையை மறந்து மேலும் பிரயாணத்தைத் தொடர்கிறார்கள்.

இன்பவல்லி

திரைக்கதை

பத்மபுரியில் சேனாதிபதி ருத்ரன், தாசி பத்மாவை தன் காம வலைக்குள் சிக்க வைக்க முயற்சிக்கிறான். ஆனால் பத்மா ருத்ரனை விரும்பாமல் புறக்கணித்து வருகிறாள்.

இன்பவல்லியையும் அன்பழகனையும் தேடி வந்த தூதர்களிடமிருந்து இன்பவல்லி, அன்பழகன் இருவருமுள்ள படம் ஒன்று பத்மாவிற்குக் கிடைக்கிறது. அதைப் பார்த்து அதில் உள்ள அன்பழகனின் மேல் காதல் கொள்கிறாள் பத்மா.

அன்பழகனும் இன்பவல்லியும் குகைக்கோவிலை விட்டு வெளியேறிய பின், அவ்வழியில் இருந்த குறவன், குறத்தி வந்து சிலையின் கழுத்திலிருந்த முத்து மாலையைக் கண்டு எடுத்து அதை சேனாதிபதி ருத்ரனுக்கு விற்கிறார்கள். ருத்ரன் அந்த முத்து மாலையை தாசி பத்மாவுக்குப் பரிசளிக்கிறான்.

மாலையை மறந்து வெளியேறிய அன்பழகனும், இன்பவல்லியும் வழியில் ஓர் கிழவியின் வீட்டில் தங்க நேரிடுகிறது. அச்சமயம் மாலையின் ஞாபகம் வரவே அதை எடுத்து வர அன்பழகன் குகைக் கோவிலுக்குச் சென்று பார்க்க, காணாது வருந்தி திரும்புகையில் தாசு பத்மாவின் வீட்டையடைகிறான். தாசி பத்மாவும், அன்பழகனைக் கண்டு ஆனந்தம் பூரித்து, உபசரித்து

அவ த் தன் வலையில் சிக்க வைக்க வசி ருந்தும் கொடுக்கிறாள். அன்பழ ும் இன்பவல்லியை மறந்து பத் ாவுடன் இருந்து வருகிறான்.

சேனாதிபதி ருத்ரனுக்கு, பத்மாவின் வீட்டில் அன்பழகன் தனக்குப் போட்டியாக இருப்பதைக்கண்டு பொறாமை ஏற்படுகிறது. அவனை விரட்ட எண்ணிய ருத்ரனும், பத்மாவின் தாயும் அவ்வூர் மந்திரவாதியின் உதவியால் ஓர் மந்திரமாலையை வாங்கி வருகின்றனர். அதை பத்மாவிடம் தங்கள் குடும்ப மாலையெனச் சொல்லிக் கொடுக்கிறாள் பத்மாவின் தாய். சூது அறியாத அன்பழகன் மாலையைத் தன் கழுத்தில் போட்டுக் கொள்ள கிளியாக மாறி விடுகிறான். கிளியும் பறந்து விடுகிறது.

மாலையைத் தேடிச்சென்ற அன்பழகன் திரும்பி வராததை எண்ணி வருந்திய இன்பவல்லி, கிழவியின் உதவியுடன் அன்பழகனைத் தேடிவரும் வழியில் அவர்கள் மந்திரவாதியின் சிஷ்யன் ஒருவனால் வஞ்சிக்கப்பட்டு, குகைக்குள் சிறையிடப் படுகிறார்கள். அங்கு கிழவியின் மகன் ருதை தன் மனைவி அஞ்சுகத்தை மீட்க வந்து இருப்பதைக் காண்கிறார்கள்.

அன்பழகன் கிளியாக மாறிய பின் பல இடங்களில் சுற்றி விட்டு அக்கிளி கடைசியில் அவ்வூர் இளவரசி மரகதவல்லியிடம் வந்தடைகிறது. கிளியின் கழுத்தில் உள்ள மாலையை அகற்றியதும், கிளி அன்பழகனாகி மாறி தன் விருத்தாந்தத்தைச் சொல்கிறான். மரகதமும் அன்பழகன் மேல் காதல் கொள்கிறாள்.

மந்திரவாதியின் குகைக்குள் சிக்கிய இன்பவல்லி முதலியோர் அங்கிருந்து தப்பியோட உபாயம் தேடுகிறார்கள். இன்பவல்லியும் மந்திரவாதியைக் காதலிப்பதாகப் பாசாங்கு செய்து, அவனிடமுள்ள மந்திரக் கோலைக் கைப்பற்றுகிறாள்.

சேனாதிபதி ருத்ரன் மரகதவல்லியைக் காதலிக்கிறான். ஆனால் மரகதவல்லி அவனை வெறுக்கிறாள். மந்திரவாதியின் உதவியால் அன்பழகனை விரட்டி விட்டோம் என நினைத்து



மகிழ்ந்திருந்த ருத்ரன் மரகதவல்லியுடன் அன்பழகன் இருப்பதைப் பார்த்து [illegible] பொறாமையும் கொண்டு, மீண்டும் மந்திரவாதியின் உதவியை நாடுகிறான். மந்திரவாதியும் பூனை ரூபம் கொண்டு கிளியைப் பிடிக்க முயற்சித்த சமயம், மரகதவல்லி கிளியை எடுத்துக் கொள்கிறாள். பூனை ரூபம்கொண்ட மந்திரவாதி வேறு வழியின்றி சுயரூபம்கொண்டு மரகதவல்லியைப் பயமுறுத்தி, கிளியைக் கேட்க, மரகதவல்லி பயந்து கிளியை பறக்கவிட்டு விடுகிறாள். மந்திரவாதி பைரி ரூபங் கொண்டு கிளியை விரட்டித் துரத்திச் செல்லுகிறான்.

இவைகளை மந்திரவாதியின் குகைக்குள் இருந்த இன்பவல்லி மந்திரக் கோலின் உதவியால் அங்குள்ள ஓர் மந்திரக்கண்ணாடியின் மூலம் பார்த்து மந்திரக் கோலை உபயோகித்து, கிளியை விரட்டி வந்த பைரியை விழ வைக்கிறாள். மந்திரவாதி சுயரூபம் அடைந்து குகைக்குள் கோபத்துடன் வரவும், மந்திரக் கோவின் சக்தியால் மந்திரவாதியை குரங்காக மாற்றி விடுகிறாள் இன்பவல்லி.

பிறகு குரங்கை அழைத்துக் கொண்டு ராஜ தர்ப்பாருக்கு வருகிறாள் இன்பவலலி. அரசனிடம் சேனாதிபதி ருத்திரன் செய்யும் அக்ரமங்களை எடுத்துச் சொல்கிறாள். அதற்குச் சாட்சியமாக அரசனுடைய மகள் மரகதவல்லியை அவளிடம் இருக்கும் கிளியை எடுத்துக்கொண்டு அரச சபைக்கு வரவழைக்கச் சொல்கிறாள். மரகதவல்லியைக் கிளியுடன் அரச சபைக்கு அழைக்கிறார் அரசன். மரகதவல்லி வந்ததும் கிளியின் கழுத்திலிருந்த மாலையை அகற்றச் சொல்கிறாள் இன்பவல்லி. மாலையை எடுத்ததும் அன்பழகன் முன்போல் மனித உருவடைகிறான். அவனிடம் சேனாதிபதியைப்பற்றிக் கேட்டதற்குத் தான் பத்மாவதியிடம் காணமற்போன முத்துமாலையை வாங்க வந்ததாகவும், அங்கு தங்கிய நாட்களில் தன் கழுத்தில் அதுகாரும்

[தொடர்ச்சி 65-ம் பக்கத்தில்]

புளிமூட்டை ராமஸ்வாமி

[16-ம் பக்கத் தொடர்ச்சி]

ராமஸ்வாமி ஒரு நிமிஷம் அடுத்த படி என்ன செய்வதென்று திகைத்தார். பிறகு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு உள்ளே சென்றார். முன் ஹாலில் டி. கே. சங்கரன் ஒரு பாயின் மேல் அமர்ந்திருந்தார். மறு கணமே அந்தக் கம்பெனிப் பையன்களெல்லாம் அங்கு கூடி விட்டனர். அவர்கள் புளிமூட்டையைப் பார்த்ததும் வாயைப் பொத்திக் கொண்டு சிரிக்க ஆரம்பித்து விட்டனர். இதற்குக் காரணம் அவர் பருமனயிருந்ததும், உச்சிக் குடுமி வைத்துக் கொண்டிருந்ததும் தான்.

அப்பொழுது கம்பெனிக்கு ஆள் தேவையில்லை என்று கூறி சங்கரன் புளிமூட்டையை வெளியிலனுப்பி விட்டார். புளிமூட்டை மனமுடைந்து திண்ணையில் வந்து உட்கார்ந்தார். சிறிது நேரத்திற் கெல்லாம் கம்பெனிப் பையன்கள் குளிப்பதற்காக ஆற்றுக்குப் புறப்பட்டார்கள். புளிமூட்டையும் அவர்களுடன் புறப்பட்டார். போகும் வழியில் அவர் கே. பி. காமாக்ஷியை சிநேகிதம் பிடித்தார். அவர் எப்படியாவது அவரைக் கம்பெனியில் சேர்த்து விடுவதாக வாக்களித்தார். குளித்து விட்டு வந்த பையன்களெல்லாம் சாப்பிடப் போனார்கள். புளிமூட்டை மட்டும் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். அங்கு வந்த டி. கே. ஷண்முகம் அவர் மீது இரக்கம் கொண்டு அவரை சாப்பிடுவதற்காக உள்ளே அழைத்துச் சென்றார்.

சாப்பாட்டிற்குப்பிறகு ஷண்முகம், பகவதி இருவரும் புளிமூட்டையைப் பாடச் சொன்னார்கள். பாட்டைக் கேட்டு டி. கே. முத்துசாமி அங்கே வந்தார். அவர் புளிமூட்டையைப் பிடில் வாசிக்கும்படிக் கூறினார். அவர் வாசித்த பின் முத்துசாமி, "எனக்கும் பிடில் கற்றுக் கொடுக்கிறீர்களா?" என்று கேட்டார். காமாக்ஷி இந்த சமயத்தை பயன் படுத்திக் கொண்டு, புளிமூட்டையை அவரிடம் சிபார்சு செய்தார்; அவர் அண்ணு சங்கரனிடம் அழைத்துப் போய் சிபார்சு செய்தார். சங்கரனுக்குத் துளியும் இஷ்டமேயில்லை. முடிவில் "சின் இழுப்பதற்காவது உதவுவான்" என்ற எண்ணத்துடன் 'சரி' என்றார். இதைக் கேட்டதும் புளிமூட்டை பூரித்துப் போனார்.

புளிமூட்டை கம்பெனியில் சேர்ந்த நான்காவது நாள் ஒரு தமாஷான முக்கிய சம்பவம் நிகழ்ந்தது. அது தான் அவரும் என். எஸ். கிருஷ்ணனும் சந்தித்து அறிமுகமாகியது. என். எஸ். கிருஷ்ணன் முன்பே அக் கம்பெனியில் நடித்து வந்தவர். ஆனால் ஏதோ மனஸ்தாபத்தால் நடுவில் கம்பெனியை விட்டு விலகியிருந்தார். அவர் திரும்பியதும் பையன்களுக்கெல்லாம் ஆனந்தம் அளவு கடந்து விட்டது. அவர்களுடன் புளிமூட்டையும் சேர்ந்து சிரித்தார்.

பையன்களின் கும்பலில் (உருவம் காரணமாக) 'பிரபலமாய்' விளங்கிய புளிமூட்டை என். எஸ். கே. யின் கண்ணில் எளிதில் பட்டது ஆச்சரியமா என்ன? எல்லோரையும் சிரிக்க வைக்கும் என். எஸ். கே.யே புளிமூட்டையைப் பார்த்ததும் உரக்கச் சிரித்து விட்டார். புளிமூட்டையும் அவருடன் சேர்ந்து சிரித்தார். பிறகு ஜனங்களைச் சிரிக்க வைக்கும் வேலையில் அவர்கள் அன்று முதல் அத்தியந்த நண்பர்களாகி விட்டனர்.

ஆரம்பத்தில் புளிமூட்டைக்கு வேஷமோ, பாடமோ கொடுக்கப்படவேயில்லை. மேடை மீது கூட்டம் அவசியமானபோது மட்டும் அவருக்கும் பவுடர் பூசப்படும். அவரை (சரீரத்தை)ப் பார்த்ததும் சபையோர்

'கொல்'லென்று சிரிப்பார்கள். இது தான் அவர் செய்து வந்த வேலை.

கம்பெனி தஞ்சையை அடைந்ததும் "அபிமன்யு" நாடகத்திற்கு ஏற்பாடு செய்தனர். அதில் புளிமூட்டைக்கு முதன் முதலாக கடோத் கஜன் வேஷம் கொடுக்கப் பட்டது. என்.எஸ். கே. புளிமூட்டையை மேல் மாடிக்குத் தனியாய் அழைத்துச் சென்று, கடோத்கஜன் வேஷத்தை எப்படி நடிக்க வேண்டுமென்று நடித்துக் காட்டினராம். திரும்பத் திரும்ப நடித்துக் காட்டிய பின்னரும் புளிமூட்டைக்கு அதுபோல் நடிக்க வராததால் என். எஸ். கே. அவரை பலமாக அடித்து விட்டாராம். அதோடு நில்லாமல் "முதல் நாடகத்திலேயே நீ 'கிளாப்ஸ்' வாங்கா விட்டால் கொன்றே போடுவேன்" என்று பயமுறுத்தினராம்.

முதல் நாடக தினமும் வந்தது. என். எஸ். கே. தம் கையாலேயே புளிமூட்டைக்கு வேஷம் போட்டு விட்டார். தைரியமும் சொல்லி மேடைக்கு அனுப்பி வைத்தார். புளிமூட்டை பாடிக்கொண்டே மேடையை அடைந்தார். கடோத்கஜன் வேஷம் அவருக்கு மிகப் பொருந்தியிருந்ததால் சபையோர் கரகோஷம் செய்தனர்; இந்த கரகோஷம், என். எஸ். கே., கம்பெனியின் முதலாளி, இதர நடிகர்கள் ஆகிய அனைவரது நன்மதிப்பையும் புளிமூட்டைக்குச் சம்பாதித்துக் கொடுத்தது. அது முதல் அந்தக் கம்பெனியின் முரட்டு ராக்ஷஸ வேஷங்களெல்லாம் அவருக்கு 'காப்பிரைட்' ஆகிவிட்டன. அவர் எந்த வேஷம் போட்டாலும் என். எஸ். கே. கூடவே வேஷம் போட்டுக் கொண்டு, அவரது பாகத்தை நன்கு சோபிக்கச் செய்வது வழக்கமாம்.

கம்பெனியில் சேரும் போது முத்துசாமிக்குப் பிடில் கற்றுக் கொடுப்பதாக புளிமூட்டை வாக்களித்தாரல்லவா? அதன் படியே முத்துசாமி பிடில் கற்க ஆரம்பித்தார். விடியற் காலையில் மூன்று மணிக்கே எழுந்து அவர் சரளி வரிசைகளை சாதகம்

கிந்தனர் காலக்ஷேபத்தில் என். எஸ். கே. யுடன் புளிமூட்டை

செய்யத் தொடங்கினர். இப்படிச் செய்தது மற்றவர்களின தூக்கத்திறகு சத்துருவாக இருக்கும என்று அவருக்குத தெரியவில்லை.

இபபடியாக தூக்கம் கெட்டுத் தவித் தவர்களுல கம்பெனியின் முதலாளியான சஙகரனும் ஒருவராவா. அவர் ஹார்மோனிஸட் கிருஷ்ண பிள்ளையிடம், "இந்த முத்து தினம அதிகாலையில பிடிலை வைத்துக் கொணடு, தூங்க விடாமல் செய்கிறுன். இதற்கு என்ன செய்யலாம்?" என்று யோசனை கேட்டார். அதற்கு அவர் தகுந்த வழி செய்வதாக வாக்களித்தாா.

மறு நாள் முத்துசாமி பிடில் வாசிப்பதறகாக வில்லை எடுத்த போது அதில குதிரை மயிர்களைக் காணவில்லை. அதற்காக அவரும் புளிமூட்டையும் ஏக ஸ்ருதியில தட்டினுர்கள். ஆனுல பலனில்லை.

சிறிது நேரததிற்குப் பின் புளிமூட்டை கொல்லைப் பக்கம் போனுர். அஙகு கிருஷ்ணபிள்ளை பிடிலிலிருந்து எடுதத குதிரை மயிர்களை அணில்களைப பிடிபபதற்காகக் கண்ணி கட்டிக் கொண்டிருநதார். இதைப் பார்த்த புள்மூட்டைக்கு ஆததிரம் பொஙகியது. ஆனுல் தன நிலைமையை உணர்ந்து அடக்கிக் கொண்டாராம். கிருஷ்ண பிள்ளை அதோடு நிறகவில்லை. அன்றிரவு அவர் பிடிலை தலைகாணியாய உபயோகித்து அதை அடியோடு நொறுக்கி விட்டாராம். அன்றோடு புள்மூட்டையும் முத்துசாமியும் பிடில் வாசிப்பதை நிறுததி விட்டனர்.

கம்பெனி கும்பகோணத்தை அடைந்ததும் புளிமூட்டைக்கு முதன முதலாக 4 ரூபாய் சம்பளம் போடப் பட்டது. அதறகாக அவர் அடைநத ஆனநதம்கொஞ்சம நஞ்சமல்லவாம்!

கம்பெனி தமிழ்நாடு பூராவும் சுறறி விட்டு காரைக்காலை அடைநதது. அங்கு கோலடன் சாரதாம்பாளும் கோவிந்தசாமி நாயுடுவும இக கம்பெனியை 'கான்ட்ராகடாக' எடுத்துக் கொண்டு அவர்களும் நடிக்க ஆரம் பித்தனர். சுமார் ஒரு வருஷகாலம் பல ஊர்களில் நாடகம் நடத்தினுர்கள். ஆனுல் நஷ்டமே ஏறபட்டு வநததால் அவர்கள் கமபெனியைக் கலைத்து விட்டு நடிகர்களை அவிரவர்கள் ஊருக்குப் போகச் சொலலிவிட்டனர். புளிமூட்டையும் ஊருக்குத் திரும்பினுர்.

பையன் எப்பொழுது ஊருக்குத் திரும்புவான் என்று காத்துக்கொண டிருந்தார் போலிருக்கிறது அவரது தகப்பனுர். புளிமூட்டை அங்கு வந்ததும வராததுமாய அவருக்குத் திருமணத்தை முடித்து வைததுவட்டாா. அதோடுகூட அந்த ஊா பிள்ளையார் கோவிலில் பூஜை செய்யும வேலையிலும் புளமூடடையை அவா அமாத்திவிட்டார். இப்படியாக சில மாதங்கள கழிநதன. இதறகுள அவரது மனைவி காலமானுர். பையன எங்கே நாடக மேடைக்கே போய் விடுவானே என்ற எண்ணத்தில் தகப்பனுா புளிமூட்டைக்கு இரண்டாம கலியாணததை யும செய்து வைத்தார். ஆனுல் புளிமூட்டையின் எண்ணமெல்லாம் நாடக உலகிலேயேஇருந்தது. அதோடு பூஜாரி வேலையும அவருக்குப் பிடிக்கவில்லை. அதனுல் அவர் ஒருமாத காலத் திறகுப்பிறகு மீண்டும் நாடகங்களில் நடிககப் புறப்பட்டாா.

இரண்டாம தடவையாக நாடக உலகில பிரவேசித்த புளிமூட்டை ஒரே கமபெனியில் நடித்து உழைக்கவில்லை. கம்பெனிகளில் சேருவதும விலகுவதுமாக சில வருஷஙகள் கழிநதன. 1936-ம் வருஷததில் புள்மூட்டை டி. என். பழநியா பிள்ளை கமபெனியில் சேரநதாா. சுமார் மூன்று வருஷகாலம் அவர் அக்கம்பெனியாருடன இலங்கை பூராவும சுறறுப் பிரயாணம் செய்து, நடித்தாா. அவருக்கும், அவரது மனைவிக்கும் மலேரியா ஜுரம ஏற்படவே கம்பெனியிலிருந்து விலகி இந்தியா திரும்பினா.

இந்த சமயத்தில், சிவகாசியில் டிராயிங மாஸ்டராக இருந்த அவரது இளைய சகோதரியின் புருஷருக்கு வேலை போய் விடவே அவா ஒரு ஹோட்டலை ஆரம்பித்திருந்தார். அவா

அழைத்ததின்பேரில் புளிமூட்டையும் அவரது மனைவியும் சிவகாசிக்குச் சென்று அந்த ஹோட்டலில் வேலை செய்ய ஆரம்பித்தனர். அவருக்கு மாதம் பத்தே ரூபாய்தான் கிடைத்து வந்ததால் அவர்களால் காலம் தள்ளுவது கஷ்டமாயிருந்தது.

எப்படியோ நான்கு மாதங்கள் கழிந்தன. ஒருநாள் ராமஸ்வாமியின் மனைவி சினிமாப் பார்த்து விட்டு வந்தார். அதில் என். எஸ். கிருஷ்ணன் நன்ருய் நடித்திருந்ததாகவும், சென்னைக்குச் சென்று அவரது உதவியை நாடினால் இவரும் சினிமா நடிகராகி விடலாம் என்றும், அதன் மூலம் தங்கள் தரித்திரமும் நீங்கிப் போகும் என்றும் கணவருக்கு யோசனை கூறினார். அதோடு நில்லாமல் மறுநாள் தன் கையிலிருந்த பொன் வளையலை கணவரிடம் கொடுத்து, அதை விற்றுப் பணம்வாங்கிக்கொண்டு, அன்றுசாயந்திரமே புறப்படும்படி வற்புறுத்தினார். சுசீலையின் வற்புறுத்தலின் பேரில் குசேலர் தம் பால்ய நண்பர் கிருஷ்ணனைப் பார்க்க துவாரகைக்கு புறப்பட்டதே போல், இந்த நவீன குசேலர் தம் மனைவி பாலாம்பாளின் வற்புறுத்தலின் பேரில் தம் நாடக நண்பர் கிருஷ்ணனைப் பார்ப்பதற்காக (1940-ம் வருஷத்தில்) சென்னைக்குப் பிரயாணமானார்.

சென்னையை அடைந்தபுளிமூட்டை ஒரு ரிக்ஷாவில் ஏறிக்கொண்டு, (கிருஷ்ணனின் விலாஸம் தெரியாததனால்) தவறுதலாக திருவல்லிக்கேணியை அடைந்து 'வாளாடி ஸ்டோர்ஸ்' வாயிலில் இறங்கினார். சாமான்களை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு, கிருஷ்ணனைத் தேடப் புறப்பட்டார்.

அன்றைய சாயந்திரம் புளிமூட்டை கடற்கரைக்குச் சென்றிருந்தார். தற்செயலாய் என். எஸ். கே. ஒரு மோட்டாரில் அப்பக்கமாகச் சென்றதை புளிமூட்டை கண்டுவிட்டார். அவ்வளவுதான்! அவர் மோட்டாரைப் பின் தொடர்ந்து சென்று என். எஸ். கே.யின் வீட்டைக் கண்டுபிடித்துவிட்டார். கிருஷ்ணனைச் சந்தித்ததும் அவரிடம் புளிமூட்டை தம் நிலைமையை விளக்கினார். கிருஷ்ணன் அப்போது நவீன விக்ரமாதித்தன் படத்தை கோவையில் தயாரித்துக் கொண்டிருந்தார். எனவே அப்படத்தில் நடிப்பதற்காக புளிமூட்டையை அவர் கோயமுத்தூருக்கு அனுப்பிவைத்தார்.

கிருஷ்ணனைச் சந்தித்த க்ஷணமே புளிமூட்டையின் கஷ்டங்கள் பறந்தோடிவிட்டன. அதுமுதல் கிருஷ்ணன் தாம் நடித்தபடங்கள் எல்லாவற்றிலும் புளிமூட்டைக்கு இடமளித்து வந்திருக்கிறார். புளிமூட்டை ஒரு பிரபல ஹாஸ்யநடிகராக விளங்குவதற்கு பூரண பொறுப்பாளி என். எஸ். கே. தான். அவர் இது வரை நடித்துள்ள படங்களின் ஜாபிதாவைக் கீழே தருகிறேன்; படியுங்கள் :—

நவீன விக்ரமாதித்தன், சதிமுரளி, கதம்பம், பூலோகரம்பை, மணிமேகலை, அலிபாபா, இழந்த காதல், கிருஷ்ண பிடாரன், பிருதிவி ராஜ், பரசுராமர், பக்த காளத்தி, பரஞ்ஜோதி, சிவகவி, சாலிவாஹன், ஹரிதாஸ், ஸ்ரீவள்ளி, உத்தமபுத்திரன், மனோன்மணி, அருந்ததி, பர்மாராணி, ராஜராஜேஸ்வரி, பிரபாவதி, கண்ணகி, குபேர குசேலா, மஹாமாயா, தாசிப்பெண், ஆராய்ச்சிமணி, ஆரியமாலா, பூம்பாவை, கிருஷ்ண பக்தி, மிளகாய்ப்பொடி காமிக், ராஜா பர்த்ருஹரி, தன அமராவதி, மதுரைவீரன் (துண்டு காமிக்) பில்ஹணன், விஸ்வாமித்திரா, மங்கம்மா, ருக்மாங்கதா, குமரகுரு, தெய்வநீதி, ஏகம்பவாணன், நல்லதம்பி, விசித்திர வனிதா, வேலைக்காரி, ஞானசௌந்தரி, ராஜகுமாரி, அபிமன்யு, மோஹினி, கன்னியின் காதலி. ஆக புளிமூட்டை இதுவரையில் 50 படங்களில் நடித்திருக்கிறார்.

என்.எஸ்.கே. லக்ஷ்மிகாந்தன் வழக்கில் முதன் முதலில் கைது செய்யப்பட்டபோது புளிமூட்டையும் மதுரையில் கைது செய்யப்பட்டார். ஐந்து

மணி நேரக காவலுக்குப் பிறகு ஜாமீனில் விடப்பட்டார். அதன் பிறகு அவர் 'எனெஸ்கே நாடக சபா'வின் நாடகங்களில் நடிக்கத் தொடங்கினர். சில மாதங்களுக்குப் பிறகு கிருஷ்ணனின் அநுமதியின் பேரில் அதை விட்டு விலகி, அவர் தனியாக வெளிப்படங்களில் நடிக்க ஆரம்பித்தார். அவர் இதுவரை 13 படங்களில் தனியாக நடித்திருக்கிருர். அவர் தனியாக நடிக்கத் தொடங்கியதும் அவருக்கு பலதரப்பட்ட வேஷங்கள் அளிக்கப்பட்டன. அதன் விளைவாக அவர் ஹாஸ்ய நடிகர் மட்டுமல்ல, சிறந்த குணசித்ர நடிகர்கூட என்ற விஷயம் வெளியாகியது. இதற்கு உதாரணமாக, தன அமராவதியிலும், மோஹினியிலும் அவரது நடிப்பைக் கூறலாம்.

தற்போது அவர் நடித்துக் கொண்டிருக்கும் படங்கள்—விஜயகுமாரி, கரிகாலன், மனிதன், சியாமளா, ஜீவமணி, லாவண்யா, வனசுந்தரி, ராஜயோகி, ஜீவகன், ஹரிசாக்ஷி, இளவரசி, சுதர்சன் ஆகியவையாகும்.

படங்களில் புளிமூட்டைக்கு பாட சந்தர்ப்பம் கிடைக்கவில்லை யென்ருலும் சாஸ்திரோக்தமான முறையில் பாடக்கூடியவர். அவருக்கு சுயமான ஸ்வர ஞானம் உண்டாம். கல்லூர் கிருஷ்ண பாகவதரிடம் அவர் சங்கீத சிக்ஷை கற்றுக் கொண்டிருக்கிருர். கஞ்சிரா, ஹார்மோன்யம் இவற்றை வாசிக்கவும் அவருக்குத் தெரியுமாம். என். எஸ். கே, யுடன் பல ஊர்களுக்குச் சென்று 'கிந்தனர்' காலக்ஷேபத்தில் அவர் கலந்து கொண்டிருக்கிருர்.

புளிமூட்டையின் உருவத்தைப் பார்ப்பவர்கள் 'அவர் நடப்பதே கஷ்டமாயிருக்குமே' என்பர். அது தவறு. அவரால் மற்றவர்களைப்போல் நடக்க மட்டுமென்ன, ஓடக்கூட முடியும். அது மட்டுமல்ல; அவரால் இப்பொழுதும்கூட சைக்கிளில்போக முடியும்; நன்ருக நீந்தக் கூடும். ஆனல் அவரால் பார் வேடிக்கைகளையும் செய்து காட்ட முடியும் என்ருல் நீங்கள் துளிக்கூட நம்பவேமாட்டீர்கள்! ஆனல் அது உண்மை. யுத்த காலத்தில்இவர் ஏ. ஆர். பி. ஊழியர்களுக்கு பார் வேலை செய்து காட்டி ஒரு மெடலைக்கூடப் பரிசாகப் பெற்றிருக்கிருர்.

விளையாட்டுகளிலும் புளிமூட்டை தேர்ந்தவர். கால்பந்து, வாலிபால், ஹாக்கி, பேட்மின்டன், சடுகுடு, கேரம்ஸ் முதலிய ஆட்டங்களில் அவர் கைதேர்ந்தவர். அவர் என். எஸ். கே. கோஷ்டியுடன் ஏ. ஆர். பி. ஊழியர்களுக்கு எதிராக வாலிபால் ஆடி அவர்களைத் தோற்கடித்திருக்கிருர்!

புளிமூட்டை நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்தபோது கும்பகோணத்தில் அவருடைய ஸ்பெஷல் நாடகம் ஒன்றிற்கு எஸ். ஜி. கிட்டப்பா விஜயம் செய்தாராம். அவர் புளிமூட்டையின் நடிப்பை மெச்சி, ஒரு பட்டுச் சால்வையை அவருக்குப் பரிசாக அளித்தாராம்.

சம்ஸ்கிருதம், தமிழ், கொஞ்சம் மலையாளம், ஆங்கிலம் ஆகிய பாஷைகள் அவருக்குத் தெரியும். ஆங்கில பாஷையைப் பற்றி அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் சிரித்துவிட்டு, பதில் சொல்லாமல் கடகடவென்று சுத்த ஆங்கில பாஷையில் சரமாரியாகப் பேசத் தொடங்கிவிட்டார்.

"பலே, பலே! ரொம்ப நன்ருயிருக்கிறது. நீங்கள் பேசுவது ஒரு தனி முறையா இருக்கிறது" என்று நான் கூறினேன்.

"இருக்கும், இருக்கும்! நான் இவைகளை உருப் போட்டுக்கொண்டு தானே ஒப்பிக்கிறேன்!" என்று 'படீர்' என்று சிரித்துக் கொண்டே கூறினர்! நானும் சிரித்து விட்டேன்.

உண்மையின் வெற்றி

ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் **உண்மையின் வெற்றி** என்ற பெயருடன் ஒரு கிராமியக் கதை தமிழ்ப் படமாகி வருவதாகத் தெரிகிறது. இப்படத்தை ஹரிபாய் ஆர். தேசாய் டைரெக்ட் செய்து வருகிருராம்.

பிரம்மலோகம்

நிஷான்

ஜெமினியின் நிஷான் ஹிந்திப்படம் வடநாட்டின் பல நகரங்களில் அடுத்த மாதம் 14ம்தேதி ஏக காலத்தில் திரையிடப் படுமென்பது நிச்சயமாகி விட்டது. இப்படத்தில் நடிக்க வந்த மாயா பானர்ஜி தம் பாகங்களை நடித்து முடித்துவிட்டு வடநாடு திரும்பி விட்டார். இன்னும் இரண்டு ஒரு காட்சிகளும் ஒட்டு வேலைகளும்தான் பாக்கி நிற்கின்றனவாம்.

அபூர்வ சகோதரர்கள்

பிரபல நாவலாசிரியர் டுமாஸின் கார்ஸிகன் பிரதர்ஸ் என்ற கதையைத் தழுவி எடுக்கப்பட்டுள்ள ஜெமினியின் இந்தத் தமிழ்ப் படம் தீபாவளி சமயத்தில் தமிழ் நாட்டின் முக்கிய நகரங்களில்திரை விடப்படுமாம். இப்படத்தில் எம். கே. ராதா வேறுபட்ட இரு வேடங்களில் தோன்றி தமது நடிப்புத் திறனை வெளியிட்டிருக்கிறாராம். சமீபத்தில் கதாநாயகனும் (ராதா) கதாநாயகி (பானுமதி)யும்முதலில் நாடகக் கொட்டகையில் சந்திக்கும் கட்டம் படமாக்கப்பட்டதாம்.

மச்சரேகை

சுகுமார் ப்ரொடக்ஷன்ஸின் மச்சரேகை படப்பிடிப்பு நியூடோனில் ஆரம்பமாகிவிட்டது. சர்வாதிகாரி சம்பந்தப்பட்ட சில காக்ஷிகள் சமீபத்தில் படமாக்கப்பட்டன. சர்வாதிகாரியாக நடிக்கும் மஹாலிங்கத்தின் மேக்-அப் இப்படத்தில் பிரமாதமாக இருக்கிறதாம். பி புல்லையாதான் படத்தின் டைரெக்டர்.

ரத்னகுமார்

முருகன் டாக்கீஸாரின் ரத்னகுமார் அநேகமாக முடிவடைந்து விட்டதாம். சீக்கிரமே திரையிடப் பெறும் படங்களில் இதுவும் ஒன்றாக இருக்குமாம். சின்னப்பா—பானுமதி, மாலதி, நாகர் கோவில் மஹாதேவன், கிருஷ்ணன் மதுரம், முதலியவர்கள் நடிக்கின்றனர். இப்படத்தை கிருஷ்ணன்—பஞ்சு டைரெக்ட செய்கிறார்கள்.

வாழ்க்கை

ஏவி. எம். கம்பெனியார் வாழ்க்கை என்ற தங்கள் படத்தை தீபாவளி அன்று திரையிட்டு விடுவார்களாம். நாட்டிய நடிகை வைஜயந்தி மாலாவுக்கு மிகவும் பொருத்தமான ஒரு பிரத்யேக பாத்திரத்தை 'மேனா' கொடுத்திருக்கிறாராம். எஸ். வி. ஸஹஸ்ரநாமம் எம். எஸ். திரௌபதி, டி. ஆர். ராமச்சந்திரன் பிரதம நடிகர்கள். இப்படத்திற்கென லலிதா-பத்மினி சகோதரியரின் அபூர்வமான நடனமொன்றைத் தயாரித்திருக்கிறாராம் 'மேனா'.

லைலா மஜ்னு

தாகூரின் டைரெக்ஷனில் வெகு ஜரூராக லைலா மஜ்னு படமாகி வருகிறது நியூடோனில். எம். வி. ராஜம்மாவும் சில பெண்களும் தோன்றும் சில காட்சிகள் சமீபத்தில் படமாக்கப்பட்டன.

பொன் முடி

மாடர்ன் தியேட்டர்ஸின் பொன்முடி எல்லிஸ். ஆர். டங்கனின் டைரெக்ஷனில் தயாராகிறது இப்படத்தில் நரசிம்மபாரதியும், மாதுரி தேவியும் பிரதம பாகங்களில்நடிக்கிறனர். இப்படத்திற்காக லலிதா-பத்மினி சகோதரியரின் நடனம் ஒன்று சமீபத்தில் படமாகியது.

விஜயகுமாரி

ஜூபிடரின் விஜயகுமாரி அவர்களது அடுத்த வெளியீடாக இருக்கும். ஏ. எஸ். ஏ. சாமியின் டைரெக்ஷனில் ராம் சிங் தோன்றும் காட்சிகள் சில சென்ற வாரம் படமாக்கப் பட்டனவாம்.

ஏழை படும் பாடு

பக்ஷிராஜாவின் 'ஏழை படும் பாடு' படப்பிடிப்பு அவர்களது ஸ்டுடியோவில் ராம்னாத் டைரெக்ஷனில் தயாராகி வருகிறது. நாகையா நடிக்கும் காக்ஷிகள் சில படமாக்கப்பட்டு விட்டனவாம். இப் படத்தில் குமாரி வனஜாவும், மாஸ்டர் கோபாலகிருஷ்ணனும் இளங்காதலர்களாக நடிக்கிறார்களாம்.

ராஜ விக்ரமா

கெம்ப்ராஜ் ப்ரொடக்ஷன்ஸ் 'ராஜவிக்ரமா' படப்பிடிப்பு ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் நடைபெற்றுவருகிறது. இப்படத்திற்கான சில வெளிப்புறக் காட்சிகளைத் தயாரிப்பதில் முனைந்திருக்கிறாராம் கெம்ப்ராஜ்.

இது செய்தி

நடிகையின் சாட்சியம்

கண்மூடித்தனமாக, அலக்ஷ்யமாக காரை ஓட்டி, அதனல் விபத்து நேரிட்டதாக போலோநாத் காரின் டிரைவர் நாகப்ப பிள்ளை மீது தொடரப்பட்டுள்ள வழக்கு சேலத்தில் இம்மாதம் 13ம்தேதி ஆரம்பமாயிற்று. சர்க்கார் தரப்பு சாட்சியமாக நடிகை பி. எஸ். சரோஜா விசாரிக்கப்பட்டார்.

திரையிடத் தயார்

ஆர்கேஎஸ் பிக்சர்ஸின் தேவமனோஹரியும், ஜூபிடரின் கிருஷ்ண விஜயமும் சென்ற மாத இறுதியில் தணிக்கையாகி விட்டன. சீக்கிரமே அவை திரையிடப்படுமெனத் தெரிகிறது.

நாம் இருவர்

நடிகர் மஹாலிங்கம், 'சுகுமார் டிராமாடிக் க்ரூப்' ஒன்றை ஆரம்பித்திருக்கிறார். பல நகரங்களுக்கும் சென்று நாடகங்கள் நடிப்பதுதான் இந்த ஸ்தாபனத்தின் நோக்கம். இவர்களின் முதல் நாடகம் நாம் இருவர். படத்தில் நடித்த நடிகர்களில் பெரும்பாலோர் இந்த நாடகத்திலும் நடிப்பார்களாம். பேபி கமலாவுக்கு பதில் பேபி ராஜாமணி நடிக்க ஒப்பந்தம் செய்யப் பட்டிருக்கிறாராம். வைரம் அருணசலம் செட்டியார் கம்பெனி நாடகங்களில் நடித்து வந்த ரத்னமாலா என்ற நடிகைகூட இவர்களது நாடகங்களில் நடிப்பாராம். இவர்களது முதல்நாடகம் அக்டோபர் மாதம் 1ம் தேதி கரூரில் நடைபெறுமாம்.

அடுத்த மாத மத்தியில் இதே நாடகம் சென்னை ரஸிக ரஞ்சனி சபாவில் நடைபெறு மென்றும், இவர்கள் சிங்கப்பூர், மலேயா போன்ற இடங்களுக்கும் போவார்கள் என்றும்தெரிகிறது.

இன்பவல்லி

சியாமளா பிக்சர்ஸின் **இன்பவல்லி** இம்மாதம் 16ம் தேதி திரையிடப்பட்டு, அமோகமான ஆதரவைப் பெற்று வருகிறது. சேலம் ரத்ன ஸ்டுடியோவிலிருந்து வெளி வந்திருக்கும் முதல் படம் இது. மஹாலிங்கம், சரோஜா, எம். ஆர். சுவாமிநாதன் பிரதம பாகங்களில் நடித்திருக்கின்றனர். கிருஷ்ணன், மதுரம், ஹாஸ்ய விருந்தளிக்கின்றனர்.

இந்திய டாகுமென்டரி படங்களுக்குப் பாராட்டு

எடின்பர்க்கில் நடைபெற்ற இவ்வருஷத்திய டாக்குமென்டரி பட விழாவில் காட்டப்பெற்ற **பரதநாட்டியம், ஐஸ்வர்ய விருக்ஷம்** என்ற இரு இந்திய டாகுமென்டரி படங்களும் வெகுவாகப் பாராட்டப்பட்டனவாம்.

திருமணங்கள்

நம் பத்திரிகை அச்சிடப்பெறும் கமர்ஷியல் அச்சகத்தின் 'போர்மென்' ஸி. தர்மலிங்க முதலியாரின் மகள் சகுந்தலா பாயை, பி அன் ஸி. மில்ஸைச் சேர்ந்த வி. முனுஸ்வாமியின் மகன் எம். வரதராஜனை இம்மாதம் 4ம் தேதி மணந்து கொண்டார். மாலையில் பி. லீலா விருந்தினர்களைத் தமது இன்னிசையால் மகிழ்வித்தார்.

சினிமா நடிகர் டி. இ. வரதன் தம் சகோதரி சௌ. சூடாமணியை, சிரஞ்சீவி வி. பார்த்தசாரதிக்கு மணம் முடித்து வைத்தார் இம்மாதம் 2ம் தேதி, சிங்கபெருமாள் கோவிலில்.

சினிமா நடிகை டி. ஆர். ராஜகுமாரி, தமது சகோதரன், நெப்டியூன் ஸ்டுடி

இன்பவல்லி

[57-ம் பக்கத் தொடர்ச்சி]

இருந்த முத்துமாலையை ஒரு நாள் பத்மாவதியின் தாயாரால் கொடுக்கப் பட்டு, அணிந்த பொழுது கிளியாக மாறியதாகவும் சொல்கிறான். இதனால் உடனே தாசி பத்மாவதி சபைக்கு அழைக்கப்படுகிறாள்.

தாசி பத்மாவதி வந்து, தன் கழுத்தில் அணிந்திருந்த முத்துமாலையைக் கேட்க வந்த அன்பழகனைத் தான் காதலித்ததாகவும், அதனால் அவனைத் தன்னிடமே தங்கச் செய்ததாகவும் கூறினாள். தன்மேல் சேனாதிபதி ருத்ரன் மோகம் கொண்டிருந்ததால் அன்பழகனை ஒழிக்க சூழ்ச்சி செய்து அவ்வூருக்கு அருகிலிருக்கும் மந்திரவாதியின் மூலம் ஒரு முத்துமாலையைக் கொணர்ந்து, வஞ்சகமாகத் தன்னிடம் கொடுத்து அதை அன்பழகன் கழுத்தில் அணிவிக்கச் செய்ததாகவும், அதைக் கழுத்தில் போட்ட சமயம் அன்பழகன் கிளியாக மாறிப் பறந்து சென்றதாகவும் கூறுகிறாள். உடனே சேனாதிபதி ருத்ரன் சபைக்கு அழைக்கப்படுகிறான். அவனைக் கேட்டதற்கு அவனுக்கு இவை எதுவும் தெரியாது என்றும் தான் அன்பழகனை பார்த்ததில்லை என்றும் கூறுகிறான். இதனால் தர்மசங்கட நிலையை அடைந்த இன்பவல்லி குரங்காக இருந்த மந்திரவாதியை மனித உருவுக்கு மாற்றுகிறாள். மந்திரவாதி உண்மைகளைக் கூறுகிறான். அதனால் சேனாதிபதி ருத்ரனின் அக்ரமங்கள் வெளிப்படுகின்றன. ஆத்திரமடைந்த அரசன் சேனாதிபதியை நாடு கடத்துகிறான். மந்திரவாதியை முன்போலக் குரங்காகச் செய்யச் சொல்கிறான். இவ்வளவு கஷ்டங்களும் மந்திரக் கோவினால் ஏற்பட்டதால் அதை நெருப்பிலிட்டுக் கொளுத்தி விடுகின்றனர்.

தாசி பத்மாவதி தன்னால் இவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டது என்றும், அதற்குக் காரணம் இந்த முத்துமாலை தான் என்றும் கூறி அந்த முத்துமாலையை அன்பழகனிடம் கொடுத்து விட்டுத் தான் தெரியாமல் செய்த குற்றங்களை மன்னித்து விடும்படி அரசனிடம் கேட்டுக் கொள்கிறாள்.

தான் ராஜகுமாரியைத் தெரியாமல் காதலித்த குற்றத்திற்காகத் தண்டனை அளிக்கும்படி கேட்கிறான் அன்பழகன். தண்டனையாக இன்பவல்லியையும் மரகதவல்லியையும் கலியாணம் செய்து கொள்ளச் சொல்கிறான் அரசன்.

யோவின் ஒலிப்பதிவாளரான டி. ஆர். ராமச்சந்திரனின் விவாகத்தை சென்ற மாதம் 29ம் தேதி ஏக தடபுடலாக தமது கன்னியாகுமரி பவனத்தில் நடத்தினர். திருப்பனந்தாள் மிராசுதார் டி. எஸ். அரவிந்தநாதம் பிள்ளையின் குமாரி சௌ. சக்குபாய்தான் மணமகள். வந்த விருந்தினர்களை சினிமா நடிகைகள் தமயந்தி, தனலக்ஷ்மி, பத்மா முதலியோர்கள் வரவேற்க, கே. பி. சுந்தராம்பாள் தமது இன்னிசையினாலும், லலிதா-பத்மினி-ராகினி சகோதரியரும், எம். கே. சரோஜாவும் தங்களது நடனத்தாலும், விகடம் கிருஷ்ணமூர்த்தி தமது விகடத்தாலும் மகிழ்வித்தார்கள்.

தம்பதிகளுக்கும் வடுவுக்கும் நமது ஆசிகள்.

சித்திரக் குள்ளன்

[ஆசிரியர் 'சந்தனு' சிறுவர் மாதப் பத்திரிகை. விலாஸம்: 1. அகாஹாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை. தனிப் பிரதி விலை அணா இரண்டு.]

கேலிச் சித்திரக்காரர் 'சந்தனு' இப்பத்திரிகையின் ஆசிரியராக இருப்பதிலிருந்தே சிறுவர்களுக்கு நல்ல விருந்தாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இதுவரை சந்தனுவின் சித்திரங்கள் அரசியல், ஹாஸ்யப் பகுதிகளுக்கே பயன்பட்டு வந்தன. சிறுவர்களுக்கும் அது பயன்படும்படி அவர் சித்திரங்கள் வரைந்திருப்பதுடன் கதை, கட்டுரைகளையும் சிறுவர்கேற்ற முறையில் வெளியிட்டிருக்கிறார். மொத்தத்தில் "சித்திரக்குள்ளன்", சிறுவர்களுக்கு மிக உபயோகமான பத்திரிகை.

மாறிய மனம்

[22-ம் பக்கத் தொடர்ச்சி]

பட விளம்பரம் மூன்று கலரில் அலங்கரித்தது.

அடுத்த வார இறுதியில் சென்னை மாகாணத்திலுள்ள எல்லா முக்கிய நகரங்களிலும் மனமோஹினி திரையிடப்படப் போகிறது.

பத்திரிகையைப் பார்த்தான் சந்திரன். மனமோஹினி படவிளம்பரம் அவன் கண்ணில் பட்டது.

'சுகுணா—தன் மனைவி இன்னொருவன் அணைப்பில் மெய் மறந்து நிற்கின்றாள்!'—அவன் நெஞ்சில் இன்னதென்று விவரிக்க இயலாத ஒரு உணர்ச்சி.

என் மனைவி—......அயலானின் அணைப்பில்—அதுவும், பல்லாயிரக் கணக்கான மக்கள் பார்க்கும் தினசரிப் பத்திரிகையில்—ஹூம்... என்ற வெறுப்பும் வெட்கமும் கலந்த சொற்கள் அவன் வாயினின்றும் வெளிப்பட்டன.

அன்று ஒரு நாள்.........

"மனமோஹினி" படம் பார்க்கத் தியேட்டருக்குச் சென்றான் சந்திரன். தானாக அல்ல; தன் நண்பனின் வலுக்கட்டாயத்தின் பேரில்.

வழிநெடுக மனமோஹினி படவிளம்பரம்—பிர்மாண்டமான அளவில்—இது விளம்பர யுகம் என்று நிரூபிக்கும் முறையில் காணப் பட்டது.

"உன் மனைவியின் உருவமும் பெயரும் இப்படி ஊர் சிரிக்க வேண்டுமா?—சீ—கேவலம்" என்று அவன் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது.

தியேட்டரில் உள்ள அனைவரின் கண்களும் சந்திரனையே உற்றுப் பார்த்தன. பார்த்து, ஏதோ குசுகுசுவென்றும் பேசிக் கொண்டனர். அப்பார்வையும் பேச்சும் அவன் மனப் புழுக்கத் தீயில் பெட்ரோலை ஊற்றுவது போலிருந்தது.

தியேட்டர் விளக்குகள் அணைந்தன. படம் திரையிடப் பட்டது. ஆனால், சந்திரனின் மனம் மட்டும் எங்கெங்கோ சஞ்சரிக்க ஆரம்பித்து விட்டது.

சுகுணா...அவன் மனைவி மற்றொருவன் மார்போடு மார்பாய் மெய் மறந்து சாய்ந்து கிடக்கின்றாள்; படத்தில் காதல் கட்டம் நடந்து கொண்டிருந்தது.

கதாநாயகன் சுகுணாவை அப்படியே தூக்கி விளையாடுகிறான்......கண்களை மூடிக் கொண்டான் சந்திரன்.

அவன் மனதில் பயங்கரப் புயல்—கொந்தளித்துக் குமுறி எழும் பேரலைகள்—வெடித்துக் கிளம்பிய அக்கினி ஜ்வாலைகள்.

"ஹ ஹ்......ஹ ஹ்......ஹ் ஹா..." பயங்கரப் பைத்தியப் பேய்ச் சிரிப்பு சந்திரனின் வாயினின்றும் சிந்தி அத்தியேட்டர் முழுவதும் பரவியது.

எழுந்தான்—அத்தியேட்டரை விட்டு எங்கோ ஓடினான்; சித்தம் சிதறிய பித்தனைப் போல என்னென்னவோ எண்ணங்கள் அவன் மனத்திரையில் மின்னின.

எங்கு செல்கிறோம் என்றறியாமல் அவன் கால்கள் அவனைச் சுமந்து கொண்டு ஓடிக் கொண்டேயிருந்தன.

எதிரில் "பாம்—பாம்" என ஒலித்துக் கொண்டு வரும் பூதாகாரமான மோட்டார் லாரி.........தன்னை மறந்து ஓடும் சந்திரனின் மேல்.........ஐயோ—அடுத்த கணம்........கோரமாகச் சிதையுண்டு கிடந்தது சந்திரனின் உயிரற்ற உடல்.

* * *

"வீல்" என்ற கூச்சலுடன் அலறிப் புடைத்துக் கொண்டு படுக்கையிலிருந்து எழுந்து மிரள மிரள விழித்தாள் சுகுணா. அவள் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

"என்ன ..? என்ன...?" என்று பதட்டத்துடன் கேட்டான் சந்திரன்.

"கண்டதெல்லாம் கனவு தானா? அப்பாடி" என்று சற்று ஆறுதல் அடைந்தவளாய் ஒரு பெருமூச்சு விட்டாள் சுகுணா.

"என்ன சுகுணா? என்ன நடந்தது?" என்று கேட்டானவன் மீண்டும்.

"ஒன்றுமில்லை" என்று கலக்கத்துடன் கூறிய வாறே அவன் மார்பில் சாய்ந்தாள்.

அவள் இருதயம் மட்டும் வேகமாக அடித்துக் கொண்டது.

"ஏதாவது கனவு கண்டாயா?" என்று கேட்டான் அவன், அவள் தலையைக் கோதி விட்டவாறே.

"உஹூம்......நான் சினிமாவில் நடிக்கப் போவதில்லை" என்று அவன் கேள்விக்கு, சம்பந்தமில்லாமல் பேசினாள், சுகுணா.

அம்மங்கிய வெளிச்சத்திலும் அவள் கன்னத்தில் கண்ணீர் வழிந்தோடுவது நன்றாய் தெரிந்தது.

அன்றைய தபாலில் சேர்க்க வேண்டியோ, என்னவோ அவசரம் அவசரமாக எதையோ எழுதிக் கொண்டிருந்தான் சந்திரன்.

"டக்-டக்" என்ற பூட்ஸ் சத்தமும், சிகரெட்டின் கம்மென்ற மணமும் டைரெக்டர் சுரேஷ் கோஷின் வருகையை அவனுக்கு அறிவித்தன.

அவன் கையிலிருந்த பேனா மேஜையின் மேல் துயில் கொண்டது. திரும்பி வாயிற் பக்கம் தன் பார்வையை வீசினான்.

"சந்திரா—என்ன முடிவு செய்திருக்கிறீர்கள்?" என்று சிரித்தபடியே கேட்டார் டைரெக்டர்.

"சுகுணாவையே கேள்" என்று கூறிவிட்டு எழுதும் வேலையில் முனைந்தான் சந்திரன்.

என்னவென்று கேட்கும் பாவனையில் சுகுணாவைப் பார்த்தார் டைரெக்டர்.

"இல்லை அண்ணா! நான் சினிமாவில் நடிக்கப் போவதில்லை, என்னவோ போல் வெட்கமாயிருக்கிறது; எனக்குப் பிடிக்கவில்லைகூட" என்று கூறிவிட்டு சமையற்கட்டிற்குள்போய் விட்டாள் சுகுணா!

மாறிய மனதுடன் சுகுணா கூறிய வார்த்தைகளைக் கேட்ட டைரெக்டர், வியப்பினால் விழிகளை இமைக்க மறந்து விட்டார்.

ஆயிரக் கணக்கான ஆச்சர்யக் குறிகள் டைரெக்டர் சுரேஷ் கோஷைச் சுற்றி வட்டமிட்டு வலம் வந்தன!!!

நல்லதெ(ா)ருக் கூத்து

"எய், நிறுத்து பாட்டை! நீ உள்ளே போ! 'கண்ணகி' வேஷக்காரியை வரச்சொல்லு."

"அதுக்கு அரை மணி ஆகுமுங்க..."

"எதுக்காகவாம் அரை மணி?........"

"அந்த வேசத்தையும் நான் தானே போடணுங்க.........!¡!!"

குண்டூசி டைரி



ஆகஸ்டு 1949.

தேதி

4. ஜுபிடரின் "கன்னியின் காதலி" பத்திரிகைக் காட்சி பாரகன் டாக்கீஸில் நடைபெற்றது.

5. சென்னை மஹாராணி, ஸ்யானி ஆகிய இரு தியேட்டர்களிலும் "வினோதினி" திரையிடப்பட்டது.

6. ஜுபிடரின் "கன்னியின் காதலி" சென்னை பாரகன், லக்ஷ்மி ஆகிய இரு தியேட்டர்களிலும் வெளியூர்களிலும் திரையிடப்பட்டது.

12. 'மாயாவதி' வெளியூர்களில் திரையிடப்பட்டது.

"இது நிஜமா" சென்னை கெயிட்டி, மஹாராணி ஆகிய இரு தியேட்டர்களிலும் திரையிடப்பட்டது.

13. மிருணாளினி சாராபாய்க்கு, சென்னை பிரதமர் தலைமையில், ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

15. சென்னை சித்ரா டாக்கீஸின் திறப்புவிழா நடைபெற்றது.

19. பாஸ்கர் பிக்சர்ஸ் "நாட்டியராணி" பத்திரிகைக் காட்சி கிரௌன் டாக்கீஸில் நடைபெற்றது.

"நாட்டியராணி" சென்னை கிரௌன் டாக்கீஸிலும், வெளியூர்களிலும் திரையிடப்பட்டது.

26. பேபி கே. நிர்மலாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் ரஸிக ரஞ்சனி சபா ஹாலில் நடைபெற்றது.

134119

27. "மாயாவதி" சென்னையில் மூன்று தியேட்டர்களில் திரையிடப்பட்டது.